தென்னகத்

# தலைவன்

ஆசிரியர்: தினகரன்



விலை 16 காசு

Anand...

# அழுகிப்போன அரசியல்வாதிகள்!
# கழுதுவட்டமிடும் கம்யூனிஸ்டுகள்!!

## அடிமைத்தனத்தில் அத்தனை சுகமா?
## அடச்சீ! நீங்களும் மனித இனமா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் தரங்கெட்ட தாக்குதல்களைத் துவக்கியிருக்கிறார்கள்.

அவர்கள் பேச்சும் எழுத்தும் கழகத்தின் குற்றச் சாட்டுகளுக்குப் பதில் கூறியிருந்தால் வரவேற்கத் தயங்கோம். ஆனால் காம்ரேட் கந்தசாமியிலிருந்து கடைசித்தரக் காந்தன்கள்வரை நாட்டுப் பிரிவினையை எதிர்க்கும் தொடை நடுங்கிகளாக மாறியிருக்கிறார்கள்.

சீனத்தவர் படையெடுப்பை வெளிப்படையாக வரவேற்க வக்கற்றவர்கள். ஆதரிப்பதாக நடித்துக் காட்டி சர்க்காரிடம் தங்களை ஒப்படைத்திருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகளின் கள்ளத்தனத்தை கழகத்துத் தோழர்கள் எழுத்தாலும் பேச்சாலும் முகத்திரை கிழித்து முச்சந்தியிலே நிறுத்திவிட்ட காரணத்தால் வாலறுபட்ட குரங்கு போலக் குதிக்கிறார்கள்.

எல்லைப் பிரச்னை தவிர வேறு செய்திகளுக்கு முக்கியம் தர வேண்டாமென்று பொதுச் செயலாளர் கட்டளையிட்டிருப்பதால் நாட்டுப் பிரிவினையைக் கண்டிக்கும் செம்பிடாரித் தோழர்களை படையெடுப்பினால் மட்டும் மதிப்பிட வேண்டியிருக்கிறது. மறுக்க முடியாத காரணங்களைச் சொல்லிவிட்டதாக எந்தக் கம்யூனிஸ்டும் மானத்தோடு விவாதிக்க முடியாது.

இருபதாண்டுகளாகியும் திராவிடநாடு வரவில்லையே என்று வாயைத் திறக்கும் வீணர்களுக்கு நம்மாலும் கேள்விக் கணை தர இயலும். இந்தியாவில் 40 வருடங்களாகக் கட்சி நடத்துகிறீர்களே, ஏன் இன்னும் கம்யூனிச ஆட்சியைக் கொண்டு வரவில்லை. கேரளத்தில் மந்திரி சபை அமைத்தபோதுகூட அச்சுதன்களும் அம்மைக் கௌரிகளும் நம்பூதிரிகளும் முண்டங்களும், சோரிகளும் சொரிபிடித்த கோவிந்தன்களும் கம்யூனிசத்தைக் கொண்டுவர முடியவில்லையே!

இதுபோன்ற விவாதத்திலே இறங்கினால் சீனத்துக் கைக் கூலிகளை மக்கள்முன் நிறுத்தத் தவறிவிடுவோம் என்ற நய வஞ்சக எண்ணம் படைத்தவர்கள் நாட்டுப் பிரிவினையை மறந்துவிட்டோம் என்று நினைவூட்டுகிறார்கள். கழகம் தன் லட்சியத்தை ஒதுக்கிவிட்டதென்றால் மகிழ்ச்சி அடைய வேண்டியவர்கள் கம்யூனிஸ்டுகளே தான்! ஆனால் கண்டனம்கூறுகிறார்கள். அவர்களது துருப்பிடித்த அரசியல் அறிவுக்குக்கூட நன்றாகத் தெரியும் என்றைக்கும் விடுதலைக் குரல், காட்டுத் தீயாகப் பரவி யிருக்கும் நாட்டுக்கு விடுதலை விரும்பும் இயக்கம் என்றும் அணைந்து விடாதென்று! அதனால்தான் அழுகிப்போன பிணங்களைப் போல அரசியல் சந்தையில் அலைகிறார்கள்!

இன்றைய தினம் சீனத்தைக் கண்டிக்கும் கம்யூனிஸ்டுகள் கடந்த நான்காண்டுகளாக எப்படி இருந்தார்கள்—இன்று இந்தியாவை ஆதரிக்கும் அரசியல் பத்தினிகள் அன்று எப்படியெல்லாம் எதிர்த்து எழுதினார்கள் என்பதற்குக் கீழ் வரும் செய்திகளைத் தெரியப்படுத்துவோம். புதிதாக அந்தக் கட்சிக்குள்ளே நுழைந்திருக்கும் 'அலிப்பையன்'களுக்கு அரசியல் நினைவுகளை உண்டாக்க இவை உதவமுடியும்.

### அண்டர் கிரவுண்டு அணங்கு

பாரிசில், இருபது வயதான பின்பும் ஒரு பெண் காதலைப்பற்றி அறியாதவளாயிருந்தால், அதற்கு இம்மூன்றினுள் ஏதேனும் ஒன்றுதான் காரணமாயிருக்கவேண்டும்: அவள் அழகற்ற வளாயிருக்கவேண்டும்; அவள் கன்னிமடம் போன்றஒரு கட்டுப்பாட்டுக்குள் அடக்கப்பட்டவளாயிருகக வேண்டும்; அல்லது பொதுவுடைமைக் கட்சிக் காரியாய் இருக்கவேண்டும்.




இந்திய சீன எல்லைத் தகராறுகள் முற்றுப்பெறாத தொடர் கதையாக வளர்ந்துவிட்டன. இந்திய சர்க்காரும், சீன சர்க்காரும், நேருவும் சௌவும் இருவேறுநிலைகளிலே நின்று எல்லை விவகாரத்தை எடை போட்டுக்கொண்டுள்ளனர்.

எல்லைகளிலே தொல்லைகள் இனியில்லை என்ற செய்தி கிடைப்பதற்கே வழியில்லை. சீனத்தவர் பின்வாங்கிய போதிலும் அந்தப் பித்த மனிதர்களின் முறை நெறியற்ற செயல்களை சுலபத்தில் எவரும் மறந்துவிட முடியாது. எல்லைக் கோட்டை அடைக்க மறந்தவர்கள் மனம் புழுங்கிக் கலங்குகிறார்கள். உள்ளே நுழைந்து இடங்களைப்பிடித்துக் கொண்ட சீனக் கம்யூனிஸ்டுகள் ஆடினர் பாடினர் காலி செய்து வெளியேறிவிட்டனர்

வஞ்சிக்கப்பட்ட பஞ்சசீலமும் வளைக்கப்பட்ட இமயத் தொடரும் முக்கிய கருப் பொருளாகக் காட்சி தருகின்றன. கண்ணீர் வடிக்கும் காவலர்கள் கழுத்தை அறுக்கும் கம்யூனிஸ்டுகள் உலகத்தின் கண்களுக்கு முன். குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டு விட்டார்கள். சீனத்து அதிகார வெறியர்களும் அவர்தம் அருமைச் சீடர்களான அடிமைகளும் அலறுகிறார்கள். சீனக் கம்யூனிஸ்டுகள் எந்தத் தவறும் செய்யாதவர்கள் என்றும், சீனப்படைகள் எல்லைகளை காக்கின்றன என்றும், இந்தியப் படைகள்தான் சீனப்பகுதிகளுக்கு தாண்டி வந்தன என்றும் 59' செப்டம்பரில் சௌ நேரு பிரதமருக்கு எழுதினார். அந்த எட்டாம் தேதி கடிதத்திற்கு இந்தியாவின் பிரதமர் செப்டம்பர் 26ல் பதில் எழுதினார்.

மிகவும் கண்டிப்பான வகையில் சீனத்தைக் கண்டித்து அவதூறுகளை அடித்துத் தூளாக்கினார். சீனக் கம்யூனிஸ்டுகளின் 'பீபிள்ஸ்டெய்லி' என்ற ஏடு, நேருவின் வாதங்களை மறுத்து நாங்கள் 'எதிர் பார்த்தவைகள்' என்று தலையங்கம் தந்தது. எல்லாவிதமான தவறுகளையும் இந்தியாவின் மீது சுமத்தி வசைச் சொற்களை நிரப்பியது.

இந்திய சர்க்காரின் செய்கைகளைச் சூழ்ச்சியென்றும், நேருவும் அந்தப் புயலில் சிக்கிவிட்டார் என்றும், திபேத் விவகாரத்தில் இந்தியா தலையிட்டதால்தான் சீனு குமுறியதென்றும் எழுதியது.

சன சகதி யென்ற சாக்கடை ஏடுதான் அதனை விளம்பரப் படுத்தியது. கொரில்லா வீரர்கள், சென்னையிலும் - பெரிய குளத்திலும் நடைபெற்ற மோட்டார் தொழிலாளர் மாநாட்டு அனுப்பிய வாழ்த்துக்களில்கூட சீனு படையெடுக்காது என்று உறுதி சொன்னார்கள்-ஆனால் உடைத்தெறிந்தார்கள்!

கம்யூனிஸ்டுகள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் சில அரசியல் பிராணிகள் மட்டும் சீனத் தலைவர்களின் சொல்லையும் செயலையும் பாராட்டித் தீர்மானம் போட்டார்கள்: 'மக்மோகன்' எல்லைக் கோட்டை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சீனுவைக் கட்டாயப்படுத்தக் கூடாதென்று கூறினார்கள். கூக்குரல் போட்டு ஊருக்கு ஊர் அலைந்தார்கள்.

சீனத்தின் 10வது குடியரசு தின விழாவிற்காக பீகிங் சென்ற அஜய்கோசும் டாங்கேயும் இந்திய மக்களின் சார்பில் வாழ்த்துக்களைச் சொன்னார்களே தவிர, இந்தியாவின் இதயத்திலே மிதிப்பதுபோல' எல்

(11-ம் பக்கம் பார்க்க)

## ஆளுக்கு முழக்கயிறுகிடைக்கவில்லையா?
## ஆறோ குளமோ தென்படவில்லையா?




மலர்-1 | 30-12-62 | இதழ்-10

# வைரப்பெட்டி !

"திராவிட நாடு விடுதலை முழக்கத்தை—சீனப்படையெடுப்பு முடிந்து இந்தியத் துணைக்கண்டம் அமைதி பெறும் வரை ஒத்தி வைக்க வேண்டும். வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற இயலும். இதை உணர்ந்து தி. மு. கழகத் தோழர்கள் நேருவின் கரத்தை வலுப்படுத்த எல்லா வகையிலேயும் ஒத்துழைப்புத் தர வேண்டும்.''

தி. மு. கழகத் தோழர்கள் தங்கள் உயிருக்கும் மேலாக மதித்து வரும் அன்பு இதயத்திலிருந்து இந்தக் கட்டளை பிறந்த பின்பு கழகத் தோழர்கள் எல்லா வகையிலேயும் துணைக்கண்ட அரசினர்க்கு ஒத்துழைப்புத் தந்து வருகிறார்கள்.

மத்திய அரசினரும் மாநில அரசினரும் கழகத்தின் நடவடிக்கைகளை வெகுவாகப் பாராட்டி வருகின்றனர்.

இந்தச் சமயத்தில் தில்லி இரும்பு மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் கோவையில் பேசும்பொழுது—

''சீனாவுடன் நடக்கும் யுத்தம் பத்து மணிக்கு நின்று போனால் பதினோருவது மணியிலிருந்து திராவிட நாடு கேட்க ஆரம்பித்து விடுவோம் என்று தி. மு. கழகத்தினர் பேசி வருவதாகக் கேள்விப்பட்டேன். அப்படிச் செய்தால் 11 மணி 5 நிமிடத்தில் கடும் நடவடிக்கை எடுப்போம்'' என மிரட்டியிருக்கிறார்.

இந்தப் பூச்சாண்டிக்கு நாம் மிரண்டுவிடப் போவதில்லையென்றாலும் ''சீன அபாயத்தைத் தவிர இப்பொழுது வேறெதையும் பேசாதீர்'' என்று அறிஞர் அண்ணா கட்டளையிட்டிருக்கும் போது, தோழர்கள் அதைக் கட்டுப்பாட்டுடன் கடைப் பிடித்து வரும்போது அமைச்சர் சுப்பிரமணியம் இப்படிப் பேசுவது தூங்கும் குழந்தையின் தொடையைக் கிள்ளி விடுவது.போன்ற பொறுப்பற்ற செயலாகும்.

குழந்தை குளத்திலே விழுந்து விட்டது. பெற்றவர், மற்றவர் எல்லோரும் துடி துடித்துக் கொண்டிருக்கிறார்கள். கூட்டத்திலிருந்த ஒருவன் தன் கையிலே வைத்திருந்த வைரப் பெட்டியைத் தரையிலே வைத்துவிட்டுக்குளத்தில் குதித்து, குழந்தையைக் காப்பாற்றி, பெற்றவரிடம் கொடுத்துவிட்டு வைரப் பெட்டியை எடுக்கப் போகும்பொழுது ''அதை எடுத்தால் கையை வெட்டி விடுவேன்'' என்று குழந்தைக்குச் சொந்தக்காரன் மிரட்டினால் அந்த நன்றி கெட்ட செயலுக்குப் பெயரென்ன?

குளம் சீன ஆக்கிரமிப்பு; விழுந்திருக்கும் குழந்தை இமயத்தின் எல்லை; குழந்தைக்குப் பெற்றோர் காங்கிரசார்; நாம் நமது உயிர்க் கொள்கையான வைரப் பெட்டியை வைத்துவிட்டுக் குழந்தையைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். குழந்தை காப்பாற்றப்பட்டு வைரப் பெட்டியை எடுக்க வந்தால் கரத்தை வெட்டி விடுவோம் என்கிறார் அமைச்சர் சுப்பிரமணியம்.

நமக்குத் தெரியும் இதற்கு என்ன பதில் சொல்வதென்று!

ஆனால், நமது அண்ணன் இதைப்பற்றி இப்போது கருத்தெதுவும் தெரிவிக்கக்கூடாது என்கிறார்!

வைரப் பெட்டியின் வழிகாட்டியே அவர்தான்!

அண்ணன் சொற்படி அமைதியாய் இருப்போம்!

வைர நெஞ்சினன் வழிப்படி நடப்போம்!

சுப்பிரமணியர் சுருதியும் குறையும்!

வைரப்பெட்டி வழிப்படி கிடைத்திடும்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் மட்டும் 165 பேர் பங்கெடுத்துக் கொண்டனர். மக்களாட்சியின் மான்பை, கீர்த்தியை அது விளக்குவதாக இருந்தது. உலகத்தில் ஒரு புதிய சாதனையை மக்கள் சபை ஏற்படுத்தியது. துணைக் கண்டத்தில் ஊர்ச்சித் துடிப்பை, கொடுமையை எதிர்க்கும் வைர நெஞ்சத்தை, பாராளுமன்றம் பளிங்கெனக் காட்டிற்று. நியாயத்திற்கும், நேர்மைக்கும், நீதிக்கும் நாம் போராடுகிறோம் என்பதை பாராளுமன்றம் உலகுக்கு எடுத்து விளக்கிற்று. சுமார் 60, 65 நாடுகள் நமது நியாயத்தின் தன்மைகண்டு தங்கள் ஆதரவை, அன்பை நல்கியுள்ளனர்.

யுத்த முழக்கங்களையும், போர்வெறிக் கூச்சல்களையும் போட்டுக்கொண்டு அமைதி பூண்டுக்கிடந்த நமது எல்லைப் புறத்தை இன்றைய தினம் ரத்தக்கறை படிய வைத்துவிட்டு திடீரென ''போர் நிறுத்தர்'' செய்துள்ளது. இது உண்மையான போர் நிறுத்தமா? அல்லது பனிக்காலம் தாண்டியதும்பார்த்துக்கொள்வோம் என்ற நயவஞ்சக எண்ணமா? என்பதை நாம் பொறுத்துத்தான் முடிவு செய்ய வேண்டும். "போர் நிறுத்த நிபந்தனைகள் சிலவற்றை வெளியிட்டு உலக மக்கள் எண்ணத்தில் குழப்பத்தை மூட்ட சீனா பாடுபட்டு வருகிறது.

பிரதமர் நேரு அவர்கள் கூறியுள்ள செப்டம்பர் 8-ந் தேதி நிலைக்கு சீனப்படைகள் பின் வாங்கியபிறகுதான், இந்தியா சீனாவிடம் எந்தப்பேச்சு வார்த்தையும் நடத்தும் என்பது உறுதி. எல்லாக் காலத்திலேயும், சமாதானம் அமைதி என்ற குறிக்கோளுடனேயேதான் நடைபோட்டு வந்துள்ளோம். ஆனால் நாட்டின் தன்மானத்தை இழந்து சமாதானத்தையும், அமைதியையும் என்றென்றும் நாம் நாடியதில்லை.

எதிரி ஆபத்தானவன், பயங்கரமானவன், எதிர்பாராமல் தாக்குதல், நடத்துபவன் என்பதை நாம் அறிகிறோம். ஆகவே நமது கடமை என்ன? நம்மை என்றென்றும் தயார் படுத்திக்கொள்ள வேண்டும். வீரம் விளைத்த பூமி இது. சற்று உற்சாக படுத்தினால் மீண்டும் அந்த வீரம் துளிர்ப்பது உறுதி. அவசர நிலை பிரகடனப்படுத்தப் படும்போது தாய்மார்களுக்குத்தான் பொறுப்பு அதிகமாக ஏற்படுகின்றது. தாய்மார்கள் தங்களது குடும்பப் பொறுப்பை ஏற்றுப் பணிபுரிபவர்கள் வீட்டிற்குத் தேவையானவற்றை அளவோடு ஏற்று அவற்றை வீணாக்காமல் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். பொருள்களைச் சேமித்து வைத்து அவற்றின் விலைகள் ஏறிவிடும்படிச் செய்யாமற் செய்வதும் நமது தாய்மார்களின்கடமைதான் அவற்றை அவர்கள் நிறைவேற்றவேண்டும் என்று நாடு எதிர்பார்க்கிறது.

விவசாயப் பெருங்குடி மக்களிடம் இரட்டிப்புஉற்பத்தியை நாடு எதிர்பார்க்கிறது.

இந்தப் போரின் முடிவு என்ன என்று பலர் கேட்கக் கூடும். நியாயத்தின் பக்கம் நாம் நிற்கிறோம். இறுதி வெற்றி நமதே என்பதில் சற்றும் ஐயமில்லை. மண்ணாசை எனும் தொழுநோய் பிடித்த சீனாவுக்கு பாடம் கற்பித்தே தீருவோம். பிறர் மண்ணை கவரும் கயமைத்தனம் நமக்கில்லை. ஆனால் சொந்த மண்ணைக் கவரும் சக்திஎதுவாயினும் கடைசி வரை சந்திப்போம்-வைரத்தை நெஞ்சமாகக் கொண்டவர்கள் நாம். திட்டத்திற்கும் ஒளிக்கும் நமது நெஞ்சங்கள எடுத்துக்காட்டுகளாக இருக்கட்டும். விடுதலை வீர வசையில் வராது-தியாகத்திலே மூழ்கி எழுபவன் தான் விடுதலைக்குச் சொந்தக்காரன். கண்ணீரும், செந்நீரும் கொட்டி விடுதலையை மிருகபலம் படைத்தவனின் காலடியிலே வைக்க நாம் தயாராக இல்லை.

சில ஆயிரம் சதுரமைல்கள் என்பதல்ல விவகாரம். மனித நடமாட்டம் அதிகமற்ற பனிப் படலம் நிரம்பிய பகுதியாயிற்றே என்பதல்ல பிரச்சினை. உரிமை கேள்வி கேட்கப்படுகின்றது. தன்மானம் சந்திக்கப்படுகிறது. இதுதான் விவகாரத்தின் மையமாகும்.

ஆதிக்காரனுக்கு அடிபணிவதைவிட அழிவுமேல். சாகசக்காரருக்கு சாமரம் வீசும் துர்ப்பாக்கியத்தைவிட ''சாவு'' இன்பந் தரும். இந்த உள்ளுணர்வு நாட்டைத் திணவெடுக்க வைக்கட்டும்.

திணவெடுத்த தின்தோள் படைத்த திரர்களே வீறு கொண்டெழுவோம். ''வீட்டுக்கொரு பிள்ளை நாட்டைக் காக்கும் பணிக்கு''. இது நமது இலட்சிய முழக்கமாக இருக்கட்டும்.

வெற்றி நமதே!

## வீரகேசரி மாத்திரை

நித்திரையில் ஜீவசக்திகள் வெளியாவதை தடுத்து நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து, ஜீவசக்தியை அதிகப்படுத்தி நீடித்து இருக்கவும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சிறந்த மாத்திரை. (அனுபவமுள்ளது—நற் சாக்ஷிகள் பெற்றது)

24—மாத்திரை. ரூ. 6-00

50—மாத்திரை. ரூ. 12-00

[தேவைக்கு எழுதவும்] :— சித்த வைத்திய பண்டிட்

**S. V. R. கண்டர். R. I. M. P.**

அரிசிப்பாளையம். லீ பஜார். P-O (சேலம்)

# தத்துவ விளக்கம் தவறுக்கு இலக்கணம்

தத்துவம்-என்ற பெயரால் தவறுகளைச் சொல்லியே பழக்கப்பட்டவர் கண்ணதாசன்!

அவர் நிலையான கடைக்காலிலிருந்து தத்துவ மாளிகையை எழுப்புவதில்லை.

அவரே சொல்லியிருக்கிறார். "நான் தத்துவத்தை தத்துவமாகப் பார்க்கிறேன்"-என்று!

இதற்குப் பொருள் என்னவென்று கேட்கிறீர்களா?

விளக்கமில்லா விளக்கெண்ணெய் தத்துவம்தானே அவர் தத்துவம்?

தத்துவம்—என்றும் நிலைத்து நிற்கக்கூடியது! ஆனால் இவர் தத்துவமோ, பொழுது விடிவதற்குள் ஆட்டம் போட்டு அடங்கும் தத்துவம்! தட்டினால் விழும்! புற்று மண்ணலான தத்துவம்; குத்தினால் உதிரும்!

ஒரு உதாரணம்:

விரிந்த ஜனநாயகத்தில் ஒரு நாடு பலமடைவதைவிட பலவீனம் அடைவதே அதிகம்—என்கிறார் செட்டி நாடாண்ட செங்கோலரசர் கண்ணதாசன்!

விரிந்த ஜனநாயகம் எது? விளக்கம் உண்டா? நாடு பலவீனம் அதனால் அடையும்? காரண காரிய விளக்கமுண்டா?

இதோ ஒரே சொற்றொடரில் பெரிய கோளாறை விளக்குகிறார் பாருங்கள்!

கட்டுப் பாடற்ற பேச்சுரிமையும் எழுத்துரிமையும் சமுதாயத்தின் கட்டுக்கோப்பையே குலைத்துவிடுகின்றன!

கவிஞர் யாரைத் தாக்குகிறார் என்றே தெரியவில்லை. வீசிய கத்தி, தனதுவிலாவைத் தாக்கவருகிறது என்பதைப் புரிந்துகொள்ளவில்லை-பாவம்!

கட்டுப்பாடற்ற பேச்சும் எழுத்தும் சிந்தனையும் தான் கவிஞனுக்கும் சுதந்திரமான சிந்தனையாளனுக்கும் வேண்டிய உயிர்க்காற்று! அது இல்லையேல் சிந்தனைப் பூங்கா சகாரா பலையாக மாறும்!

இது அவருக்குத் தெரிய நியாயமில்லை! காரணம் தத்துவத்தை தத்துவமாகப் பார்ப்பவர்!

கட்டுப்பாடற்ற பேச்சுரிமையும்—எழுத்துரிமையும்--என்று ஏதாவது இப்போதிருக்கிறதா?

எதற்கும் கட்டுப்பாடு உண்டே?

எதைவேண்டுமானாலும் எழுதலாம்—பேசலாம் என்று கண்ணதாசனைப் போல் துணிந்துவிட்டால், மக்கள் கட்டுப்பாடாக அவர்களை வெறுத்து ஒதுக்குவது இல்லையா?

கட்டுப்பாடு வேலிதாண்டிய விளங்குகளை சட்டம் என்ற தடியால் அடித்து நொறுக்கும்

## இசைகெட்ட பாட்டு இனிக்காது தவறான தத்துவம் வாழாது

காட்சிகள்தான் அன்றாடம் நிகழ்கின்றனவே?

பேச்சுரிமையும், எழுத்துரிமையுமே சமுதாயக் கட்டுக்கோப்பைக் குலைத்து விடுகின்றன—என்று அவர் கருதியிருக்கலாம்—

அந்த உரிமைகள் இல்லாமலிருந்தால் சனாதன சமுதாயக் கட்டுக்கோப்பை கண்ணதாசனின் புதிய 'அப்பச் சிதந்தை பெரியார் செய்திருக்க முடியாது. சுய நினைவு உள்ளவன் சாப்பிடத் தகாததைச் சாப்பிட்டால் வாயை மூடிக்கொண்டிருப்பான். ஆனால், அந்த நினைவு இல்லாதவன், வாயைத் திறந்து வையகத்தின் மூக்கை மூடத்தான் செய்வான்!




இந்தியாவின் ஜனநாயகம் இந்திய மக்களை வெறும் பேச்சுக்காரர்களாகவும், உழைக்க மனமில்லாத சோம்பேறிகளாகவும், ஆக்கிவிட்டது. கைவண்டிக்காரன் முதல் கடைக்காரன் வரை வேலை செய்வதை விட்டுவிட்டு அரசியல் விமர்சனம் செய்வதிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள்.

இந்திய ஜனநாயகத்தில் குறை இருக்கிறதோ—இல்லையோ—இவர் காட்டும் குறை, ஜனநாயகத்தின் மணத்தையும் குணத்தையும 'கல்லாதவன் சொல்'லாகவே இருக்கிறது.

உழைக்க மறந்துவிட்டு, அரசியல் விமர்சனம் செய்கிறார்கள்—என்று கூறும் சினிமாக் கவிஞர், சினிமாவுக்கு கவிதை எழுதுவதை விட்டுவிட்டு ஏனய்யா அரசியலில் "ஆரோக்யசாமியின் அபிப்ராயங்களை" உலவவிடவேண்டும்?

கைவண்டிக்காரன் முதல் கடைக்காரன் வரை அரசியல் விமர்சனம் செய்வதுவரவேற்கவேண்டிய ஒன்று.

அரசியல், காரிலே பவனி வந்து, கனவான்களுடன் கை குலுக்கும் 'கானாடு காத்தான்'களுக்கு மட்டும் சொந்தம் என்றும் நினைப்பதும்.

கைவண்டிக்காரன் அரசியலைபற்றி பேசுவதா—என்று எண்ணமிடுவதும்--கடைந்தெடுத்த முதலாளிகளின் ஊளைச்சதையில் ஊறிய உதவாக்கரைத் தத்துவம்!

சமுதாயத்தின் அடி முதல் முடிவரை பலரும் ஆட்சியியல் பற்றிய தொடர்பு கொண்டிருப்பதே ஜனநாயகம்! ஒரே ஒருவனின் சிந்தனையிலும் செயலிலும் சிக்குண்டு ஆட்சியியலுடன் தொடர்பல்ல—ஆட்சியியலுக்கு அடிமையாகி இருப்பதே சர்வாதிகாரம்.

அந்த இட்லர் பாவைக்கு வழி வகுக்கிறார், ஜனநாயகத்தின் பெயரைக் காட்டி பிறந்தகம்விட்டு ஓடிப்போன கவிஞா!

ஜன்நாயகதநின் தெளிவான உரிமைகளை ஜனங்கள் அறிந்து கொள்கிறவரை அறிவும் நகணயமும் மிக்க ஒரு தலைவனின் சர்வாதிகாரம் நாட்டில் நிலவவேண்டும்!

என்ன வேடிக்கையான வாதம்! ஜனநாயக உரிமைகளை எப்படி சர்வாதிகார நாட்டில் அறிந்துகொள்ள முடியும். சர்வாதிகாரியின் நாட்டில் சர்வாதிகாரத்தின் தன்மையைத்தானே உணர முடியும்?

காங்கிரஸ் தலைவராய் நேரு இருந்தபோது, "நேரு—ஒரு சீசர்"—என்று தன்னைப் பற்றிய சுய விமர்சனம் செய்து கொண்டஜனநாயகவாதிநேரு

அவரையே கெடுக்கப்பார்க்கிறார் கவிஞர்! தமிழ் நாட்டு அரசியலில் தான் தன்னைச் சேர்ந்தவர்களை எங்கோ இழுத்து விட்டுவிட்டார்—என்றாலும் அகில இந்திய அரசியலிலும் அதே 'கண்ணன் திருவிளையாடலை'த் துவக்குகிறாரே!

பிள்ளையின் செல்லம் கூட்டத்திற்குள்தான் செல்லுபடியாகும்; பள்ளிக் கூடத்தில் செல்லுமா?

கவிஞரின் 'காக்கைப்பொன் தத்துவம்' அறிஞரிடையே செல்லுபடியாகுமா?

இவரது தத்துவங்கள், அறிஞர்களின் பார்வையில், பகம்பு விட்ட சட்டை; எழுமை ஞழப்பிய குட்டை; நீர் மேல் குமிழி; கெட்டார்சீ கவிதை!

கம்யூனிஸ்ட் சீனன்

# அடுத்துகெடுத்த துரோகி

# அமைதி கெடுத்த பாவி



இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லைப் பகுதியை வளைத்துக் கொண்ட ஏகாதிபத்திய வெறிபிடித்த கம்யூனிஸ்ட் சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்து தி. மு. கழக முன்னோடிகளுள் ஒருவரான க. ராஜாராம் எம்.,ஏ. எம்.பி. அவர்கள் 25-12-62 இரவு 7-30 மணி அளவில் சென்னை வானொலியில் ஆற்றிய முழுக்கருத்துரையும் இப் பகுதியில் இடம் பெற்றிருக்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக அமைதி நிலவும் பூமியாக, இமயத்தின் அடியில் இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் தொட்டிலாகவும், இடர் ஏதும் அறியாத மக்களையும் கொண்ட இந்த உபகண்டத்தில் எல்லைப்புறம்திடீரென இன்று தாக்கப்பட்டுள்ளது. போரில் சாயலைக்கூட அந்த மக்கள் கண்டதில்லை. இயற்கை தந்த செல்வத்தை உழுது பயிரிட்டு வாழ்வை வளமாக்கி வாழ்ந்து வந்தவர்கள்தான் அங்கே ஏராளம். அமைதி மண்டிக்கிடந்த ஊர்கள் இன்றைய தினம் பயங்கரமான சீன ஆக்கிரமிப்புக்கு ஆளாக்கப்பட்டு விட்டது. பசுமை படர்ந்திருந்தஎல்லைப்புறத்தை கருத்த யுத்த மேகங்கள் சூழ்ந்து கொண்டன.

பதினைந்து ஆண்டுகாலமாக விடுதலை பெற்றதன் விளைவாக தன்மானத்தோடு உலக நாடுகளுக்கெல்லாம் அமைதியை போதித்து வந்த இந்தியா இன்றைய தினம் பின்புறம் இருந்து தாக்கும் நயவஞ்சக எதிரியை தனது எல்லைப்புறத்தில் சந்தித்துக்கொண்டிருக்கிறது. உலகில் உள்ள சின்னஞ்சிறு நாடுகள் அனைத்தையும் காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்கத்தனது முழு ஆதரவையும் தந்து பாடுபட்டு வந்த நாடு, இன்று தனது விடுதலை பறிபோகாமல் இருக்கப் போராடிக்கொண்டிருக்கிறது. விடுதலைச் சுடரை உலகெங்கும் ஏற்றிவைக்க அல்லும் பகலும் பாடுபட்டு வந்த நாடு, தனது நாட்டுவிடுதலைத் தீபத்தை அணையாமல் பாதுகாத்துக்கொள்ள துடிதுடிக்கிறது.

இந்த நாட்டின் முழுக்கவனமும் சீன ஆக்கிரமிப்பின் மீது ஈர்க்கப்பட்டு அதன்மீது முழு எண்ணமும் செலுத்தப்பட்டிருக்கிறது. சீன ஆக்கிரமிப்பைப் பொறுத்தவரையில் அது திடீரென்று அல்லது எதிர்பாராத வகையிலோ ஏற்பட்டுவிட்ட ஒன்று என்று நான் கருதவில்லை. ஏற்கனவே திட்டமிட்டு செயல்புரிவதாகவே எனக்குப் படுகின்றது.

ஏன் என்றால், சீன நாட்டுக்கும் இந்தியாவுக்கும், ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகவே இயற்கையாக எல்லை அமைந்திருக்கிறது. அதை இரண்டு நாடுகளும் நடைமுறையில் ஒப்புக்கொண்டே செயலாற்றி வந்துள்ளன. மக்மகான் எல்லைக்கோடு என்பது வரையப்பட்டே ஐம்பது ஆண்டுகள்தான் ஆகின்றன என்றாலும் அதற்கு முன்பே பல நூற்றாண்டுகளாக நமது நாட்டின் எல்லைப்புறத்தைப் பற்றி எந்த விதமான சர்ச்சையோ, விவாதமோ நடைபெற்றது கிடையாது. பதிமூன்றாண்டுகளுக்கு முன்பு சீனாவில் தோன்றிய கம்யூனிச அரசாங்கம் உருவாவதற்கு முன்புவரைகூட எல்லை நடை முறையில் ஒப்புக்கொள்ளப்பட்டே வந்திருக்கிறது. புதியதாகத் தோன்றிய அரசு, புதிய நிலவரைப் படங்களை வெளியிடத் தொடங்கிற்று. அண்டை நாடுகளில் எல்லைகளைத் தன் நாட்டுடனே சேர்த்து வரைந்து காட்டத் தொடங்கிற்று. இந்தபடங்கள் இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

''மக்மகான் கோடே நமது எல்லை அந்த எல்லையைத் தாண்டி எவரும் வருவதை அனுமதிக்க மாட்டோம்'' என்று பிரதமர் பண்டிதநேரு அவர்கள் 1950ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் நாள் இந்திய மக்கள் சபையில் அறிவித்தார்.

1954ம் ஆண்டு சீன நாட்டுக்குச் சென்றிருந்த இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் சீனப் பிரதமர் சூ என் லாய் உடன் எல்லைப் பிரச்சினையைப் பற்றி விவாதித்தார். சீனப் பிரதமர் நிலவரைப் படங்களைத் திருத்த சம்மதம் தெரிவித்தார். உலக நாடுகளுடைய நல்லெண்ணத்தையும் நட்பையும் பெறுவதில்இருந்த ஆர்வத்தாலும் இந்தியாவைப் போன்றே அனைவரது உள்ளமும் வெள்ளையுள்ளந்தான் என்ற பெருத்த நம்பிக்கையாலும் சீனப் பிரதமர் சூஎன்லாய் வார்த்தைகளை இந்திய அரசாங்கம் பெரிதும் மதித்துப் பாராட்டிற்று. ஆனால் 1955ம் ஆண்டு உத்தரப்பிரதேசத்தின் எல்லைப்புறத்தில் உள்ள பாரஹோத்தியில் சீனா முகாம் போடத்தொடங்கிற்று. ''நிலவரைப் படங்களை மாற்றி அமைப்பேன்'' என்று சூஎன்லாய் சொன்ன சொல் காப்பாற்றப்படவில்லை. கடந்த ஏழு ஆண்டுகளாக லடாக் பகுதியிலும் வடகிழக்கு எல்லைப்புற ஏஜென்ஸியிலும், உத்தர பிரதேசத்தின் எல்லையிலும் ஹிமாசலப் பிரதேசத்தின் எல்லையிலும் சீன முகாம் பெருகிக் கொண்டே வந்தது.

வடகிழக்கு எல்லைப்புற ஏஜன்ஸியைப் பொருத்தவரை, 1959ம் ஆண்டு வரை சீனர்கள் உள் நுழையவில்லை. 1959ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ம் நாள்தான் சீனர்கள் எந்த விதமான தாக்குதலும் செய்யாமல் தக்ளா கணவாயைச் சூழ்ந்து கொண்டனர். ''சூழ்ந்து கொள்ளுங்கள் ஆனால் தாக்காதீர்கள். தாக்குங்கள் ஆனால் சூழ்ந்து கொள்ளாதீர்கள்'' என்பதுதான் மாசேதுங்கின் சித்தாந்தமாகும். ஆனால் அக்டோபர் 20ம் நாள் அவர்கள் தாக்குதல் நடத்தினர். அவர்களை நமது ராணுவம் சரியான முறையில் அடிகொடுத்து அப்புறப்படுத்திற்று. ஜனநாயகத்தில் பெரு நம்பிக்கை கொண்டு, அதன் சீரிய முறைகளின் மூலம் சீன ஆக்கிரமிப்பை இந்தியா காண்பித்தே வந்துள்ளது. எல்லைப் புறத்தில் சீனா அளித்து வந்த தொல்லைகளையும் பொருட்படுத்தாமல் ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவுக்குஉரிய இடம் தரப்படவேண்டும் என்றே இந்தியா வாதாடி வந்துள்ளது.

ஆனால் மக்களாட்சிப் பாதையில் நம்பிக்கை அற்றவர்களாகவும், ஏகாதிபத்திய எண்ணங்களை வளர்த்து வந்ததின் பயனாகவும் சீனாவுக்கு ஆக்கிரமிப்பு எண்ணம் வளர்ந்தே வந்தது. அதன் விளைவு திபேத் பறிபோயிற்று. ஆனால், தலாய் லாமா மட்டும் காப்பாற்றப்பட்டார். தற்போது இந்த உபகண்டத்தின் மீதே படையெடுக்கச் சீனா துணிந்துவிட்டது.

எல்லைப் புறத்தின்மீது திடீரெனப் படையெடுத்த சீனா, உலக நாடுகளின் அன்பைத் தன்பக்கம் சாய்க்க வேண்டிய பல புதிய பிரச்சார தந்திரங்களைக் கையாண்டது. இந்தியா தன்மீது படையெடுத்துள்ளதாக பாருக்கெல்லாம் பறைசாற்றிற்று. சீனா கடந்த கால வரலாற்றையும் அதன் நம்பிக்கை துரோக எண்ணங்களையும் நன்கு அறிந்த உலக நாடுகள் சீனரின் சிறுமதி கண்டு நகைத்தனர்.

இந்தியாவின் எல்லைப்புறம் தாக்கப்பட்ட சேதி அறிந்ததும் காமன்வெல்த் நாடுகளின் தலைவியான எலிசபெத் அரசியாரும் அமெரிக்காவும் எல்லா விதமான உதவிகளையும் நிபந்தனைகள் ஏதுமின்றி செய்ய முன் வந்தனர். நாட்டின் பல்வேறு கருத்துக்கள் கொண்ட அரசியல் கட்சிகள் பிரதமர் பண்டித நேரு அவர்களின் கையைப் பலப்படுத்த ஓடோடி வந்தனர். சீனப்போர் பற்றி விவாதிக்க பாராளுமன்றம் உடன் கூட்டப்பட்டது. பிரதமர் நேரு அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் மக்கள்

(-3ம் பக்கம் பார்க்க)

## தோழர் டி. கே. சீனிவாசன் அன்னையார் மறைவு

தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களின் அன்னையார் ஆனந்தவல்லி அம்மாள் அவர்கள் சில நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்து தமது 65-வது வயதில் 27-12-62 இரவு இயற்கை எய்தினார்கள்.

அன்னையின் பிரிவால் வாடும் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கட்கும், அவரது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# வெல்லம்கசக்கிறதா? செல்லப்பாண்டியரே

குறை கூறவேண்டும் என நிமிர்ந்து நின்று விட்டால், நியாயமான எந்தப் பிரச்சினையானாலும் அதைக் குறைகூறி, குற்றமாக்கி, ராஜத் துரோகச் செயல் என்றுகூடப் பூதக்கண்ணாடி வைத்துப் பெரிதாக்கி விடலாம். இது—இதைச் செய்வோரின் திறமை, அறிவு, வசதி வாய்ப்பைப் பொருத்ததாகும்.

பலாப்பழத்தின் மேற் பகுதியை மட்டும் காண்பவர்கள், கீறினால் முட்டிக்கொண்டு நிற்கும் சக்கையை மட்டும் கவனிப்பவர்கள் பலாவின் தன்மையைப் பலவாகக் குறை சொல்லமுடியும். உள்ளேயிருக்கும் சுவையான சுளையைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. அந்தச் சுவை சுமந்து நிற்கும் தோலைப்பற்றித்தான் அவர்களது கண்ணோட்டம் விரிவாக அமையும்.

முள்ளைக்காட்டி ரோஜாவைப் பழிக்கும் முட்டாள்தனமான வாதங்கள் இன்று அரசியலில் சர்வசாதாரணமாகி விட்டது.

உலகில் நடைபெறும் முக்கியமான பல பிரச்னைகளைப் பற்றி சம்பந்தப்பட்டவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கவனித்து விமர்சிப்பதைக் காட்டிலும், அதை யார் சொல்லுகிறார்கள் என்பதைக் கவனித்து விமர்சிக்கும் ஆற்றலை இன்றைய அரசியல் வாய்மூடி நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிறகு ஆளைப் பார்த்து மட்டும் விமர்சனம் செய்யக் கற்றுக்கொண்டிருக்கும் யாரோ ஒரு அரசியல் நிபுணர்; இது எப்படித் தத்துவப் போராகும் என மெல்ல முனங்கினார். அது ஒலியாகி ஒலி முழக்கமாகி, முழக்கம் கோரசாக உருவெடுத்து இன்று அது மார்கழி மாதப் பஜனைப் பாடலைப்போல்தாளந்தவறி, சுருதி கெட்டுப் பாடப்பட்டு வருகிறது.

உண்ணாவிரதக் கதாநாயகர்கள், காட்டிக் கொடுத்தோர் என்ற பட்டயத்தை அதிகாரப் பூர்வமாகப் பெற்றிருப்போர்

## துரோகிகளுக்கு நீர் துணையா? விரோதிகளுக்கு நீர் விளக்கா?

அரசியலில் கொலுப்பொம்மைகளாகக் குடியிருப்போர் இப்படிப் பலரும் இது தத்துவப் போரல்ல என்று ஒரே குரலில் கரைய ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஆட்டத்தைப் பார்த்திடாமல் ஆளை ஆளைப் பார்க்கிறார் என்ற பாடலை மெய்ப்பிக்கும் அரசியல் கலைக் கூத்தாடிகள் இவர்கள்.

அரசியலில் வில்லன் வேடம் தரித்திருப்பவர்கள் எந்தப் துப் பேசியிருக்கிறார். வெல்லம் கசக்கிறதென்று வீம்புக்குப் பேசியுள்ளார்.

"இதைச் சிலர் தத்துவப்போர் என்கிறார்கள். அது சுத்தத் தவறு. இருபது வருஷமாக ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்காவும் பிரிட்டனும் ஹிட்லரை வளர்த்தார்கள். ஹிட்லர் தங்கள் மீதே பாய்ந்தவுடன் ஸ்டாலினுடன் சேர்ந்து கொண்டார்கள். தங்கள் நாட்டைப் பாதுகாக்க யாருடைய உதவியையும் பெறுகிறார்கள். அதைத் தத்துவப் போர் என்று கூறுவதா?" இப்படி அவர் பேச்சு 26—12—62 ஜனசக்தியில் இடம் பெற்றிருக்கிறது.

செல்லப்பாண்டியர் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இருபது வருஷமாக ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்காவும் பிரிட்டனும் ஹிட்லரை வளத்தார்கள் உண்மை! ஆனால் இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்று வரை எந்த நாட்டுக்கு எதிராக யாரை வளர்த்தது. இல்லை எந்த நாட்டை மட்டும் தன் வளர்ச்சிக்கு, பாதுகாப்புக்குத்

காவும் பிரிட்டனும் ஸ்டாலினோடு சேர்ந்து கொண்டார்கள். தங்கள் தாய்நாட்டைப் பாதுகாக்க யாருடைய உதவியையும் பெறுகிறார்கள். அது எப்படித் தத்துவப் போராகும் என்கிறார் செல்லப்பாண்டியன்.

ரஷ்யாவுக்கெதிராக பிரிட்டனும் அமெரிக்காவும் ஹிட்லரை வளர்த்தது போல் இந்தியத் துணைக்கண்டம் யாருக்கு எதிராகவும் கம்யூனிஸ்ட் சீனாவை வளர்க்கவில்லை. ஸ்டாலினுடன் பிரிட்டனும் அமெரிக்காவும் சேர்ந்து கொண்டு தங்கள் தாய்நாட்டைப் பாதுகாக்க உதவிபெற்றது தத்துவ போர் அல்லதான். அது அரசியல் சாணக்கிய வேலைகளில் ஒன்று. ஆனால் யாரையும் பகைத்துக் கொள்ளாமல், கோஷ்டி குழப்பங்களில் சிக்கிக் கொள்ளாமல் தெளிவாகஓடும் ஆற்று நீரைப்போல் அமைதியாக வீற்றிருந்த இந்தியத் துணைக்கண்டத்தின் மீது கம்யூனிஸ்ட் சீனா தொடுத்திருக்கும் அக்கிரம ஆக்கிரமிப்புப் போருக்கு என்ன காரணம். என்ன அடிப்படை?

சரியோ தவறோ ஒரு தத்துவத்தை மையமாக வைத்துக் கொள்கையை அமைத்துக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் சீனா, புனிதமான தத்துவத்தின் அடிப்படையில் தெளிவான கொள்கையை வளர்த்துக் கொண்டிருக்கும்—

## நேரு செய்வது தவறா?

சந்தை வியாபாரிகள் திறமையோடு வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

"இந்தியத் துணைக்கண்டத்திற்கும்-கம்யூனிஸ்ட் சீனாவிற்கும் நடைபெறும் போர் வெறும் எல்லைப் போரல்ல. இது ஒரு தத்துவப் போராகும்."

இப்படிச்சொன்னார் அறிஞர் அண்ணா அக்டோபர் 28 ந் தேதி நடைபெற்றகடற்கரைக் கூட்டத்தில். இதைச் சொல்லி பிரச்சினையையும் விளையாட்டாக விமர்சிக்கலாம். ஆனால் பொறுப்பிலிருப்பவர்களும் அவர்களுடன் கைகோர்த்துக் கொண்டு பொருமையால் கார்வது, வேடதாரிகளுக்கும் அவர்களுக்கும் வித்தியாசத்தைக் காட்டாது.

தமிழக சட்டமன்ற சபா நாயகர் செல்லப்பாண்டியன் அவர்களும் இது தத்துவார்த்தப் போர் அல்ல என்று அடித்

## கூறும் கொலுப் பாண்டியரே!

சாதகமாக, அரணைப் பயன்படுத்திக் கொண்டது. நடுநிலைமையிலிருந்து விலகாமல் புனிதமான தத்துவத்தின் அடிப்படையில் எழுந்த தன் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் தான் இந்தியத் துணைக்கண்டம் எல்லா நாடுகளுடன் நேசம் கொண்டாடி வருகிறது.

ரஷ்யாவுக்கெதிராக வளர்க்கப்பட்ட ஹிட்லர் தங்கள் மீதே பாய்ந்தவுடன் அமெரிக்

இந்தியத் துணைக்கண்டத் மீது படையெடுத்து போர் தொடுத்திருக்கிறதென்றால் அதற்கு என்ன பெயர்?

கம்யூனிஸ்ட் சீனா தனது கொள்கையின் படி எல்லையை —முடிந்தால் நாட்டை விரிவுபடுத்தும் முயற்சியில் இறங்கிப் போர் தொடுத்து இந்தியத் துணைகண்டத்தின் பலத்தைப் பரிசோதனை செய்திருக்கிறது.

(10-ம் பக்கம் பார்க்க)

# குழந்தைப் பேச்சைக் கைவிடுவீர்!
# கொற்றம் பெருமை காத்திடுவீர்!



# வைராக்கியம்

**சபதம்**

''தங்கப்பாண்டியனும்! பெற்ற வயிறு பற்றியெறிய கொன்றுவிட்டான் சண்டாளன். சின்ன வயதில் சிறைக்குப் போய், சிங்கத்தமிழன் எனப் புகழ்பெற்று என்னைக் கொல்லாமல் கொன்றுவிட்டுப் போய்விட்டான் என் செல்ல மகன் மானகிரி. இப்படி அற்ப சொற்ப வயதில் குடும்பம், பிள்ளையென்றால் என்னவென்று அறியாமல் துர்மரணம் ஆவான் என்று நான் நினைக்கவில்லை. குல தெய்வங்களுக்கெல்லாம் காணிக்கை செலுத்தியிருக்கிறேன். என் கையால் லஞ்சம் வாங்காத போலீஸ்காரர்களே இல்லாத அளவுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் கொடுத்து அழுதிருக்கிறேன். இத்தனையும் என் மகன் அச்சமில்லாமல் வீட்டோடு வாழ வழி செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்தேன். என் மகன் வீட்டுச்சோறு சாப்பிட்டு ஆறு வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. யார் வைத்த தீயோ என் வீட்டைப் பற்றி எரிகிறது! குடிகெடுத்த தெய்வங்களா! உங்களுக்கு அடுக்குமா? டேய் தங்கப்பாண்டியா? என் குடும்பத்தைப்போல் உன் குடும்பமும் அலைமோதிப் போகாதா? உன்னுடைய பெண்டு பிள்ளைகள் நிம்மதியாகவா சாகப் போகிறார்கள்! வினைவிதைத்தவன் தினையறுத்ததில்லையடா?'' — மானகிரியின் கொலைச் செய்தியறிந்த அவனது தாய் சிலம்பாயி பொருமி அழுதாள். புழுதியில் புரண்டு புரண்டு கதறினாள். அவன் குடியிருந்த தெருவே வீட்டுமுன் திரண்டு ஆறுதல் கூறியது. ஆறுதல் எடுபடக்கூடியதா? வீடு எரிந்தால் சமாதானம் கூறலாம்; திருடுபோனால் ஆறுதல் சொல்லலாம். போனால் திரும்பாத ஊருக்கு — ஒரே மகன் போனதற்காகத் துடிக்கும் மனத்தை ஆற்ற முடியுமா? அந்த வயோதிகத்தாய் தனக்கு ஒரு மருமகள் வருவாள் என்று மனக்கோட்டை கட்டியிருக்கலாம். அவளுக்கொரு பிள்ளை பிறக்கும்; பிறந்தால் பாட்டன் பெயர் வைக்க வேண்டுமென ஆசைப்பட்டிருக்கலாம். ஏழை வீட்டில் ஏற்படும் சாவு; வெடிச்சரத்தில் தீ வைப்பது போன்றது. தொடர்ந்து பல ஆசைகளுக்கு அது கொள்ளிவைத்து விடுகிறது. எப்போதோ எடுத்த புகைப்படம் — மானகிரியுடையது. அந்தப் படத்திற்கு ரோஜா மலர்மாலை போட்டு விட்டு வாசலில் மாட்டிவிட்டாள் சிலம்பாயி. தனக்காக எதையும் தரும் அண்ணன்மீது ஆறாத பற்றுக்கொண்டிருந்த செவந்திமாலையும் கண்ணீர் சொரிந்தாள். வாய்விட்டுக் கதற அவளுக்கு வயது இடம் தரவில்லை. கன்னிப்பெண்! பதினெட்டு வயது!

**எஸ். எஸ். தென்னரசு**

சிலம்பாயிக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்காது. திடகாத்திரமான உடற்கட்டு! ஆடவர்களைப்போல் ஐந்தரையடி உயரமிருப்பாள். உயரத்திற்கேற்ற சதைப் பிடிப்பு. வெண்கலக்குரல். வெடு வெடு வென்று பேசினாலும், சுபாவம் என்னவோ சாந்தமானதுதான். வெற்றிலைக் காவி படிந்த பற்கள். தெருவில் நடக்கும் குடும்பச் சண்டை; வாய்த்துடுக்கால் ஏற்படும் கன்னிப்பெண்களுள் கெடிபிடி போர் இவைகளுக்கெல்லாம் பரிகாரம் காணும் பொறுப்பு அவளிடம் இருந்தது. அவள் நியாயம் தவறிப் பஞ்சாயத்துச் செய்ததில்லை. இருப்பவர்களுக்கு ஒரு முடிவு, இல்லாதவர்களுக்கு ஒரு முடிவு என்ற பேச்சே அவளிடம் இருந்ததில்லை. சிலம்பாயி யாருக்கும் பயந்தவளல்ல, பார்ப்பதற்கே பயிற்சி பெற்ற பயில்வானைப் போலிருப்பாள். வெள்ளைப் புடவைதான் அவள் உடுத்துவது. விதவைதானே!

மானகிரியிடமிருந்து சிலம்பாயி எதையும் எதிர்பார்த்திருந்ததில்லை. சாணம் தட்டி விற்பதுதான் அவளுக்குத் தொழில். அது அவளுக்கு நல்ல தொழில். குடும்பச் செலவு போக மீதம்கூடக் கண்டாள், அந்தத் தொழிலில். தெருப்பிள்ளைகள் சாணம் கொண்டுவந்து கொடுப்பார்கள். பதிலுக்குக் காசு கொடுப்பாள்; தவறினால் தவிடுகொடுப்பாள். மொத்தத்தில் அவள் அந்தத் தெருவுக்கு நாட்டாண்மைக்காரிபோல் கீர்த்தியுடன் வாழ்ந்தாள். எப்போதாவது போலீஸ்காரர்கள் நடுநிசியில் மானகிரியைத் தேடி ஆறுவயலுக்கு வருவார்கள். தேவகோட்டைக்கும் ஆறுவயலுக்கும் நாலு கல் தொலைவு. கண்டதேவிக்கும் ஆறுவயலுக் அதைவிடக் குறைவு. ஆறுவயலில் தான் சிலம்பாயி குடியிருந்தாள்.

மானகிரியை சப்-இன்ஸ்பெக்டர் சுட்டுக் கொன்றுவிட்டார் என்ற செய்தி மறுநாள் பகல் பொழுதிலேயே சிலம்பாயிக்கு எட்டிவிட்டது. அவள் கோபப்பட்டதைப் பலர் பார்த்திருக்கிறார்கள்; அவள் முச்சந்தியில் நின்று ஆடவர்களையும் அறைகூவி அழைத்துப் பேசியதையும் பலமுறை கேட்டிருக்கிறார்கள். ஆனால் கண்ணீர் வடித்ததை—புலம்பி அழுததை — குய்யோ முறையோ என்று ஒப்பாரிவைத்துக் கதறியதை அது வரை யாரும் பார்த்ததில்லை. ரத்தபாசம் அவள் வீரத்தைக் கரைத்து, ஆணவத்தைப் புதைத்துப் புழுவாகத் துடிக்க வைத்த சோகக் கட்டத்தை அன்றுதான் ஆறுவயல் மக்கள் பார்த்தார்கள். அவள் தனிப்பட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்தவளாயிருந்தாலும் அந்த ஊருக்கே உறவினளாக வாழ்க்கை நடத்தினாள். எல்லோரும் அவளை முறை வைத்து அழைத்துப் பழகியிருக்கிறார்கள். ஆகையால் அவளது துயரத்தைக் தாங்க முடியாமல் அத்தனைபேரும் கண்ணைத் துடைத்துக் கொண்டார்கள்.

கத்திக் கத்தி அவள் தொண்டை வற்றிவிட்டது. தேம்பித்தேம்பி செவந்திமாலையின் முகம் விம்மிப் புடைத்து விட்டது.

பொழுது சாயப்போகும் நேரம். தரையின் சூடுதணிந்து விட்டது. கதிரொளி, நெடுஞ்சுவர்களுக்கு பழுப்பு வர்ணம் கொடுத்துக் கொண்டிருந்தது. அப்போது தெருக்கோடியில் 'டுப் டுப்' என்று சத்தம் கேட்டது. எல்லோரும் பாதையை விட்டு ஒதுங்கி நின்றார்கள். சிங்கராயனும் பஞ்சுப்புலியும் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினார்கள். சிலம்பாயி அவர்களை இலட்சியம் செய்யவில்லை. செவந்திமாலை மட்டும் நாணத்துடன் விலகிப் போய் சுவர் ஓரத்தில் நின்று கொண்டாள்.

''நடந்ததை நினைத்து வருந்தி என்ன ஆகப்போகிறது! எழுந்திருங்கள்'' என்று சிலம்பாயிக்குச் சமாதானம் சொன்னான் சிங்கராயன்.

10-ம் பக்கம் பார்க்க)

''வைராக்கியம்'' தொடர் கதை படிப்பதற்கு விறுவிறுப்பாக உள்ளது.

சோ. ம. தியாகராசன், திருவாரூர்

தென்னரசு கதையென்றதும் படிக்க ஆவலோடு காத்திருந்தேன். ஆரம்பமே சுவையாக உள்ளது. ஒளிந்து மறைந்து, துப்பாக்கியுடன் சிங்கராயன் வீட்டுக்கு வரும் பெண் மானகிரியின் தங்கையென்று நினைத்திருந்தேன். மானகிரி என்றதும் பரபரப்பாகப் படிக்கத் தூண்டிற்று.

ஆர். ராமலிங்கம், இராசிபுரம்

துப்பறியும் கதைபோல் படிப்பதற்கு விறு விறுப்பாக இருக்கிறது. இந்த வாரம் கதைக்கேற்ற முகப்பு கவர்ச்சியாக இருந்தது.

எம். சண்முகம், சேத்துப்பட்டு

# வெள்ளையனுக்கு வேட்டி மடித்தவர்கள் கொள்ளையனுக்குக் குடை பிடிக்கிறார்கள்!

(-11ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவைக் காப்பாற்றும் கர்ம வீரனாக காட்டிக் கொடுத்தே பழக்கப்பட்ட டாங்கேத் தலைவர் மாஸ்கோ தேவதைகளின் முன்னால் மண்டியிட்டு, இத்தாலியக் கம்யூனிஸ்டுகளின் காலடியில் தன் தகுதியையும், கட்சியின் மானத்தையும் காணிக்கையாக்கி வைத்துள்ளார். இந்த மனிதன் கல்கத்தா முடிவுகளை எதிர்க்கும் தனி நிலையை மராட்டியக் கட்சியில் பலப்படுத்தினார்.

சீனர்கள் எவ்வளவு உயர்ந்த ஆதாரங்களைக் காட்டினாலும் 'மக்மோகன்' எல்லைக் கோட்டையே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றார். தன்னுடைய 60-வது பிறந்த தின விழாவில்பேசிய டாங்கே, தன் கட்சி செய்த தரங்கெட்ட தவறுகளையெல்லாம் எதிர்தரப்பினர் சொல்வதைவிட விளக்கமாகச் சொன்னார். மன்னிப்புக் கேட்டுத் திருந்திக் கொள்வது கம்யூனிஸ்டுகளின் நிரந்தர வழக்கம் என்பதையும் முதலிலேயே கூறி ஒப்புக்கொண்டார்.

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் டாங்கேத் தலைவருடைய முழுப் பேச்சினையும் சகதித் தாளில் அச்சிட மறுத்துவிட்டார்கள். காரணம் டாங்கே வெளியே சொல்லக்கூடாத சதிச் செயல்களையெல்லாம் சௌபாத்திக் கடற்கரையிலே மேடை போட்டு ஒலிபரப்பிவிட்டார். மக்களுக்குச் சேவை செய்வதிலும் தவறு செய்திருக்கிறோம் என்ற டாங்கேயின் செய்திகள், தாயின் பிணத்தைக்கூடப் பார்க்க வராத தலைமறைவு கந்தசாமிகளுக்கு கசக்கத்தான் செய்யும்.

காம்ரேட் டாங்கே கம்யூனிஸ்ட் கட்சியைக் காட்டிக் கொடுத்த நிகழ்ச்சிதான் பம்பாய்ப் பொதுக்கூட்டம். கட்சி தவறு செய்த போதெல்லாம் நான் இப்படித்தான் சுட்டிக் காட்டினேன் என்று ஆதாரங்களைக் குவித்துக் காட்டினார். ரணதிவேக்களும் ரகசிய தலைவன் சோசியும் மறுக்கவில்லை. தமிழகத்து அய்யர்களும் அய்யங்கார்களும் எதிர்க்கவில்லை. சதிவழக்கு—ஆயுட் கைதி—என்ற சிறப்புக்குரிய அடிதண்டங்கள் அதுக்குப் பின்னாலே விளையாடும் அரசியல் முண்டங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே நினைவூட்டுகிறேன்.

சொரணையும் சொந்தப் புத்தியும் சோரம் போகாவிட்டால் சொறி சிலம்பத்தில் மறுத்துக்காட்ட ஆர்த்தெழட்டும். ஆண்டிப் பண்டார அரசியலிலே அல்ல ஆதாரங்களுடன்! எந்த மீரட்டைக் காட்டுகிறார்களோ அதற்கு முன்னாலேதான் டாங்கே சொன்னார். இந்திய சீன எல்லை மக்மோகன் என்பதை கல்கத்தா மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் தோற்றுவிட்டாலும் மீரட் தேசீயக் கௌன்சிலில் சாதித்துக் காட்டி, ரணதிவே—ஜோசிக் கும்பலை வீழ்த்த முயன்றார். அதுமட்டுமல்ல அந்தக் கூட்டத்திலே தான் 1942ல் நடைபெற்ற ஒரு சதிச் செயலையும் வெளிப்படுத்தினார்.

வெள்ளையனுக்கு வேட்டி மடித்துக் கொடுத்த கம்யூனிஸ்டுகளைப் பற்றி ஆகஸ்ட் துரோகிகளைப் பற்றியே டாங்கே பேசினார்: ''தோழர்கள் ஜோசியும் ரணதிவேயும், பிரிட்டனிலுள்ள கம்யூனிஸ்ட் தலைவர் ரஜனியாமிதத் என்ற (இந்தியாவிலே பிறந்து இங்கிலாந்துக்குத் தத்துப்போன) தலைவருடன் ரகசியமாகப் பேசி, பிரிட்டனுடைய யுத்த முயற்சிகளை ஆதரிக்கக் கூடாதென்று தோழர் ஸ்டாலின் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்குக் கொடுத்த அறிக்கையை மறைத்து விட்டார்கள்.'' 'வெள்ளையனே வெளியேறு' என்ற காந்தியாரின் இயக்கத்தில் கம்யூனிஸ்டுகள் காட்டிக் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டு இதன் அடிப்படையில்தான்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான 'நியூஏஜ்' என்பது இப்போதுகூட சீனத்தை ஆதரித்து இந்தியாவைக் கண்டிக்கும் 'பிராவ்தா'வின் கருத்துக்களை வெளியிட்டது போலவே அஜய்கோஷ், ரணதிவே இருவரின் கட்டுரைகளை மட்டுமே வெளியிட்டது. சீனத்தின் முயற்சிகளுக்கு ஆதரவாக கடிதங்களைப் பறிமாறினால் மட்டும் போதாது சந்தித்துப் பேசுவதே வழி என்றார்கள்.

யாரை யார் சந்திப்பது என்பதைச் சொல்ல மறந்தனர். நேருதான் சீனத்துக்குப்போய் அந்த அமைச்சர்களிடம் அடிபணிய வேண்டுமென்று எதிர்பார்த்தனர். இதைச்சொன்ன நேரத்தில் இந்தியக் காவல் படை வீரர்கள் பதின்மர் சுட்டுக் கொல்லப்பட்டனர் சீனர்களால். அந்தப் பிணங்களின் மீது நின்றுகொண்டுதான் இந்தி—சீன பாய் பாய் என்று 'கல்கத்தா காம்ரேடுகள்' கதறினர்—கம்யூனிஸ்ட் சீனாவைக் கண்டிக்கவில்லை! அதனால்தான் அன்றிலிருந்து இன்றுவரை மன்னிப்புப் பெறமுடியாதவர்கள்; சதிகாரர்கள் — சண்டாளர்கள் என்று 'சர்டிபிகேட்' பெற்றுக் கொண்டுள்ளனர்.

ரத்த வெறி பிடித்த ரணதிவேயின் ரகசியச் செய்திகளில் ஒன்றுதான் அவர் 1949ல் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தபோது மாசேதுங்கிற்கு எழுதிய கடிதமாகும்.

''நேரு சர்க்கார் ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சொல்லுகின்றபடியே செயல்பட்டு, சீனாவிற்கு எதிராக ஏகாதிபத்தியவாதிகளுக்கு இந்தியாவை ஒரு தளமாக மாற்றியுள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியானது இத்தகைய சீன எதிர்ப்பு முயற்சிகளை முறியடித்து, நேரு சர்க்காரை ஏகாதிபத்தியங்களின் பிடியிலிருந்து விடுவிக்க வெகுஜன கிளர்ச்சிகளை திரட்டி அவர்களைத் தோற்கடிப்போம்''—என்பது அதன் சுருக்கமான விளக்கமாகும்.—மாசேதுங் எழுதிய பதிலில் ''இந்தியா நீண்டநாட்களுக்கு ஏகாதிபத்தியவாதிகளின் தயவிலும் அவர்களுடைய கையாட்களின் முகாமிலும் இருக்காது உங்கள் முயற்சிகள் வெற்றி பெறட்டும்!'' என்று வாழ்த்துகளைக் கூறி இந்தியக் கம்யூனிஸ்டுகளைத் தூண்டிவிட்டிருக்கிறார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பதினெட்டு ரகசிய அறிக்கைகள் அடங்கிய தொகுப்பு நூலில் உள்ள இப்படிப் பல வகையான பயங்கரச் செய்திகளை பரிதாபத்துக்குரிய பாரத கம்யூனிஸ்டுகள் படித்துப் பார்த்தால் பங்கப்பட்டு வீழ்ந்திருக்கும் தங்களது தரங்கெட்ட போக்கை உணர்ந்து திருந்திக் கொள்வார்கள்.

அரக்கோணம் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரான நகர மன்ற உறுப்பினர், விவசாயிகள் போராட்டத்தில் சிறைப்பட்டவர் இப்படித்தான் விலகினார். கரூர் கம்யூனிஸ்டுகள் இருவர் வெளியிட்ட அறிக்கைகளுக்குப்பிறகும் கந்தசாமிகள் காம்போதி இசைக்கிறார்கள். தாம்பரம் கம்யூனிஸ்டுகள் மாநிலக் குழு மாநாட்டிற்குத் தந்த வினாத்தாட்கள் அந்தக் கட்சியினரின் அரசியல் மானத்திற்கு அனுப்பப்பட்ட அறைகூவல் மட்டுமல்ல—பரீட்சையுமாகும்! மாஸ்கோ போய்த் திரும்பியிருக்கும் புதிய பாகவதர்களுக்கும் புரட்டுப் பேச்சாளர்களுக்கும் வேறு பல புதிய செய்திகள் அடுத்த இதழில் வருகின்றன.

## மானத்தைப் பறிகொடுத்த ஐ. மா. பா.

நெல்லைக் கட்சியின் இரண்டாவது பொறுப்பாளராக இருந்த ஐ. மாயாண்டிபாரதி திருநெல்வேலியில் தலைமறைவாக ஒளிந்திருந்த இடத்தை போலீசார் முற்றுகையிட்டார்கள். நள்ளிரவில் அங்கே வந்த ஐ.மா.பா. இதை உணர்ந்து தப்பி ஓடும்போது கட்டியிருந்த வேட்டி கதவுக் கம்பியிலே, மாட்டிக் கிழிந்தது. ஆனாலும் வீரர் வேகமாக ஓடினார் நிர்வாணமாக! தச்சநல்லூரிலேபோய் ஒளிந்துகொண்டு ஒற்றர்கள் வாயிலாகக் கடிதம்அனுப்பியபோது, தான் ஒரு துண்டை மட்டும் கட்டிக் கொண்டு இருப்பதாகவும், தன்னுடைய கால் சட்டைகளையும், புஸ் கோட்டுகளையும் அனுப்பிவைக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்! அந்த மா. பாக்கள் இன்று ஜனசக்தி அலுவலகத்திலே இருந்துகொண்டு கழகத்தவர் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் விதவைகளைப் போல விம்மிக் கொண்டிருக்கிறார்கள்!

# நடப்பது தத்துவப் போரே!—இதை

சவக்குழிக்குள் தள்ளப்பட்ட பின்பும் சில விநோதச் சடலங்கள் வக்கணை பேசுகின்றன!

ஊர்ப்புரணி பேசியே பொழுதைக் கழிப்பதில் சுகங் கண்ட கீழ்ப் பிறவிகள் அவை. எவர் மேலோ இருந்த எரிச்சலால் எல்லார் மீதும் எச்சிலை உமிழ்கின்றன. அவற்றிற்குத் தலைமையேற்றுள்ள காட்டுக் கூகை கடந்த கிழமை தனக்கேயுரிய பணியை 'தமிழில் செய்தி' ஒன்று தந்து நிறைவேற்றியிருக்கிறது.

''சீனாவுக்கும் இந்தியாவுக்கும் நடைபெறும் போர் ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துக்கும் நடைபெறும் ஒரு தத்துவப் போர் என்று பலரும் கூச்சலிடுகின்றனர்.''

இப்படிக் கத்துகிறது அது.

ஆமாம்! பழுத்த புலமைப் பெரியார் இன்ன பிறரெல்லாம் திருவாய் மலர்ந்தருள் வதனைத்தும் கூச்சலாம்! புகழென்னும் குன்றேறி நின்றோர் மொழிவதெல்லாம் காக்கையின் கரைசலாம்; கூகையின் கத்தலாம். கிணற்றுத் தவளைகளின் அழுத்தமான முடிவு இது.

இந்திய—சீனப்போர் ஒரு தத்துவப் போர் என்று அண்ணா சொன்னதை, தனது வாடிக்கைப்படி மறுத்த அது உலகப் பெரியார்கள் பலரையும் பழித்திருக்கிறது. சந்தைக் கடைச் சந்தடி என்று நினைத்ததோ—குழாயடித் தகராற்றுக் குரல் என்று எண்ணியதோ, என்னவோ, அறிவில் மூத்தோர் கருத்துரைகளைக் 'கூச்சல்கள்' என்றிருக்கிறது பண்பின் எதிரொலிதான் வார்த்தை!

அண்ணாதான் தத்துவப் போரென்று தவறாகச் சொல்லுகிறார்—அவர்கள் அகராதிப்படி! இராதாகிருட்டினரும் அறியாதவரா? கூச்சல்போடும் காட்டுமிராண்டியா?

சீனம் இந்தியாவைக் கவர முனைவது மண்ணாசைகொண்டு மட்டுமில்லை. கவர்ந்து தனது தத்துவத்தைத் திணிக்கவே—கம்யூனிச அகிலத்தின் பரப்பைப் பெருக்கவே-இவ்வளவும் செய்கிறது என்பது அப்பட்ட உண்மை; பள்ளிப் பிள்ளைக்கும் தெரிந்த சேதி.

இப்போரின் மூலம் சீனம் சாதிக்க நினைப்பது என்ன?— இதற்கு இராதாகிருட்டினர் தரும் பதில் வருமாறு: ''இருள் சூழ்ந்த (கம்யூனிச) தத்துவத்தை சீனம் இந்தியாவில் நுழைக்க முயல்கிறது!''

இந்தியா எதிர்ப்பதேன்? ஜனநாயகத்தைக் காக்க!

குடியரசுத் தலைவர் பேச்சும் கூச்சலா? அரசியலில் காது எனும் உறுப்பை இழந்தது களே! பதில் தேவை!

''ஆசியாவின் இருபெரு நாடுகளான இந்தியா, சீனா ஆகியவற்றுக்கிடையே உள்ள சித்தாந்த மோதலின் விளைவைப் பொறுத்தே, ஆசியாவில் சனநாயகத்தின் எதிர்காலம் இருக்கும்'' என்றார் பாதுகாப்பு அமைச்சர் சவான். பகையைத் தடுத்துப் படையை நடத்தும் பொறுப்பில் உள்ளவர் கூறுகிறார். சித்தாந்த மோதல் என்று. அதையும் கூச்சல் என்கிறாரா பெரியாரின் பிள்ளை.

''கடந்த காலத்தில் இந்தியாவில் படையெடுப்புகள் ஏற்பட்டன. ஆனால் இன்று ஏற்பட்டுள்ள படையெடுப்பு புதிய தன்மை வாய்ந்தது. ஏனென்றால், இது சித்தாந்தக் கிளர்ச்சியில் தோன்றியதாகும்!'' என்றும் அவர் கூறியுள்ளதற்கு அரசியல் விதவைகள் தரும் மறுமொழி என்ன?

ஜீவ நதிகள் என்று பெயர் பெற்றவை எல்லாம் இன்று இரத்த நதிகளானதேன்? துணைக் கண்டத்து அரசின் கொள்கைகளை வகுக்கும் பெரும் அமைப்பான தேசிய வளர்ச்சிக் குழுவே இப்படிச் சொல்கிறது: ''நமது சுதந்தரத்தையும் தன் மானத்தையும் நமது அரசியற் சட்டத்தில் ஏற்கப்பட்டுள்ள சனநாயக வாழ்க்கை முறையையும் பாதுகாப்பதற்காக நாம் போராடிவருகிறோம்!''

சனநாயக முறைக்கு எதிரியாக ஒன்று வந்திருக்கிறதென்றால், அது பொதுவுடைமை வெறிக் கொள்கை என்றுதானே பொருள்? கொள்கைக்கு எதிரி மற்றொரு கொள்கை தானே?

கைப் புண்ணைப் பார்க்கவும் கண்ணாடி தேடும் மேதைகள் இதற்கென்ன பதில் தருவர்?

மரமண்டைகள் தவிடுபொடி படச் சம்மட்டி அடி தருகிறது, சிங்கபபூரில் உள்ள லிபரல் சோஷலிஸ்ட் கட்சி; மண்டூகப் போக்கில், கொண்டதே கொள்கை என்று உளறித் திரியும் பிறவிகள் இதைக் காணட்டும்: ''இந்தியாவின் எல்லையில் நடைபெறும் போரானது, வெறும் வர்க்கப் போரில்லை; இரண்டு தத்துவங்களுக்கிடையே நடக்கும் போர் ஆகும்.''
—(லிபரல் சோஷலிஸ்ட் கட்சியின் அறிக்கையில் ஒரு பகுதி.)

பிறவியில் சீனரான மற்றொருவரும் அண்ணாவின் கூற்றை வழிமொழிந்துள்ளார். மலாயாவின் நிதியமைச்சரான அவர் பெயர்தான் —சின்-சின் என்பதாகும். மலாயா சீனர் சங்கப் பொதுக்குழுக் கூட்டத்தில் அவர் இப்படிக் கூறினார்: ஆப்ரிக்காவிலும் ஆசியாவிலும் உள்ள மக்களின் இதயத்திலும் சிந்தனையிலும் போட்டியிட்டு வருகின்ற இரண்டு மிகப் பெரும் முக்கிய தத்துவங்களுக்கிடையேயுள்ள போராட்டம் தான் இந்த வேற்றுமைக்குக் காரணம் எனக் கருதலாம்.''



எதையோ நினைத்து — எப்படியாகிலும் அரசியலில் மறுபிறவி கிடைக்காதா என்று சீனனுக்கு வக்காலத்து வாங்கும் பிறவிகளே! இப்போதும் அண்ணாவின் பேச்சைக் கூச்சல் என்கிறீர்களா?

மா. பாண்டியன்

அர்ஜண்டைனா ஏடொன்று சனநாயக நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு காட்ட வேண்டும் என்று எழுதியதன் பொருளையும் ஊன்றி நோக்கமட்டும் திறனிருந்தால்.

அப்பட்டமான உண்மைகளை பிறந்த மேனியாகவே சந்திக்க அஞ்சாத அரசியல் வல்லார் அனைவரும் இதைத் தத்துவப் போர் என்று ஒப்புக்கொண்டு கருத்துரைத்து விட்டனர். அண்ணாவின் மீதுள்ள காய்ச்சலால், அத்தனை பேர் பேச்சையும் கூச்சல் என்கிறது அது. வயிற்றெரிச்சல் அறிவை மறைக்கத்தானே செய்யும். அதனால்தான் சீனாவை பொதுவுடைமைச் சர்வாதிகார நாடு என்று சொல்லக்கூட மறுக்கிறது.

அண்ணா இதைத் தத்துவப் போர் என்றால், அது ஏதோ அரசியல் இலாபத்தை எதிர்பார்த்துச் சொல்வது என்று கதைக்கின்றார் பெரியாரின் வாரிசு.

# நம்ப மறுப்போர் நம்மை எண்ணி வயிறெரிவோரே!

அரசியலைவிட்டே ஒதுங்கி விட்ட வினோபாவும் தத்துவப் போரே என்கிறாரே! அவர் எந்த இலாபத்தைக் கருதிப் பேசுகிறார்?

பூச்சாண்டிஅரசியல் நடத்துவோருள் சிலர் இப்படியும் கேட்கின்றனர்: ''இது தத்துவப் போர் என்றால், இந்நேரம் சீனாவுக்குத் தோள் கொடுத்திருக்க வேண்டுமே ருசியா? மாறாக நடுநிலையன்றோ? வகிக்கின்றது?''

ருசியா இன்று வேண்டுமானால் நடுநிலைமை வகிப்பதாகச் சொல்லலாம்; இராசதந்திரத்தோடு நடந்து கொள்ளலாம்; அது தொடக்கத்தில் என்ன சொன்னது? சீனாவைச் சகோதர நாடு என்றதே! அதை எவர் தாக்கினாலும் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம் என்றதே! எதிர்ப்பவரைத் தவிடுபொடியாக்குவோம் என்று சல்லடம் கட்டியதே! அதன் பொருள் என்ன?

அதிர்ச்சியடைந்த நேரத்தில்தான் உண்மைகள் வெளியாகும் என்ற நியதிப்படி, திடீரென்று போர்ச் செய்தியால் தாக்குண்டதும் ரஷ்யா தனது அந்தரங்கத்தை அம்பலத்தில் கொட்டி விட்டது. நின்று நிதானித்துச் சிந்தித்த பின்னர்தான் எதிர் விளைவுகள் அதன் அறிவுக்குத் தென்பட்டிருக்கின்றன. உடனே தன் நாவைத் திருத்திக் கொண்டிருக்கிறது.

கியூபாவில் பட்ட மூக்கறுப்பை நினைத்துப் பாாத்த பின்னரே அதற்குத் தெளிவு பிறந்திருக்கிறது.

(12-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலம்பாயி பைத்தியம் பிடித்தவளைப் போல் ஒன்றும் பேசாமல் நின்ருள். அவள் முகம் சிவந்திருந்தது. அவளது கண்கள் கனிந்த நாவல் பழங்களைப் போல் கசிந்துருகின.

''என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு! நான்தான் சிங்கராயன். முதலில் உள்ளே வாருங்கள் போய்ப்பேசலாம்'' சிலம்பாயியை உரிமையுடன் கையைப் பற்றித் தூக்கினுன் சிங்கராயன்.

''என்னை எங்கே கூப்பிடுகிறீர்கள்.என் மகன் உள்ளேயா இருக்கிருன்? இதோ படம்! அவன் உள்ளேயும் இல்லை; வெளியேயும் இல்லை! அவன் எங்களை பிரிந்து போய்விட்டான். யாருக்கும் வணங்காத மகன் என் மகன். மானங்காக்கும் மறவனுக்கு வாழ்க்கைப்பட்டு புலியைப் போல் பிள்ளையைப் பெற்றேன்.மானகிரி! நீ எப்படிச் செத்தாயோ! சாகும் போது என்ன நினைத்தாயோ! விக்ரகம் போல் தங்கையை விட்டுப் போய்விட்டாயடா!'' என்று மீண்டும் புலம்ப ஆரம்பித்து விட்டாள் சிலம்பாயி.

''செவந்திமாலையை நான் பார்த்துக்கொள்கிறேன். திருமணந்தானே! நீங்கள் கவலைப்படாதீர்கள்'' என்று உருக்கமாகப் பேசினுன் சிங்கராயன்.

சிலம்பாயி வீறிட்டெழுந்தாள். ''செவந்திமாலைக்குக் கல்யாணமா?'' என்று கர்ஜித்தாள். அந்தக் கர்ஜனையைத் தொடர்ந்து ஒரு பயங்கரச் சிரிப்பு! உயர்ந்த படிக்கட்டிலிருந்து செப்புப் பாத்திரத்தை உருட்டி விட்டதைப்போல் அந்தச் சிரிப்பொலி கேட்டது.

''தம்பீ!''

''என்ன வேண்டும் உங்களுக்கு!''

''எனக்கு இனி என்ன தேவைப்படப் போகிறது! வேண்டியதைத்தான் கொடுத்துவிட்டானே அந்தத் தங்கப்பாண்டியன்! நான்தான் இனி அவனுக்குச் சன்மானம் கொடுக்க வேண்டும். அரசாங்கம் என் மகனைச் சுட்டதற்கு அவனுக்குச் சன்மானம் கொடுக்கப் போகிறது. அதற்கு முதலில் நான்கொடுக்கும் பரிசைத்தான் தங்கப்பாண்டியன் பெற்றுக்கொள்ளப் போகிருன்'' என்று கூவினுள்.

சிலம்பா\u0bcdயிக்கு புத்தி தடுமாறி விட்டதாக எல்லோரும் எண்ணிக்கொண்டார்கள். சிங்கராயனும் பஞ்சுப்புலியும்கூட அப்படித்தான் நினைத்துவிட்டார்கள்.

சிலம்பாயி குரல் அடங்கவில்லை. ''தம்பி, இதோ என் மகள்! வயது பதினெட்டு! சிங்கத்தின் மகள்! புலிக்குத் தங்கச்சி! நான் மறத்தி! வீரனுக்கு மனைவியானேன்! வீரனையே பெற்றெடுத்தேன். எங்கள் குடும்பமே மானத்திற்காக வாழ்ந்த குடும்பம். போன யுத்தத்தில் என் புருஷனைப் பறிகொடுத்தேன். இன்று மகனை இழந்தேன். இருப்பது ஒரே மகள்! அவள் பத்தரை மாற்றுத் தங்கம். மானத்தோடு வாழ்ந்த என் தெரு மக்களின் முன்பாகவே கூறுகிறேன். என் வாழ்க்கையில் இனி ஒரே ஒரு ஆசை! அந்த ஆசை நிறைவேற என் மகளையே நான் பணயப் பொருளாக வைக்கிறேன்.''

''அவசரப்பட்டு எதையும் பேசாதீர்கள்'' — சிங்கராயன் குறுக்கிட்டான்.

''தெரியும் தம்பீ! நான் பைத்தியக்காரியல்ல! விபரம் தெரிந்துதான் பேசுகிறேன். எவன் என் மகனைத் துடிதுடிக்க வைத்துக் கொன்ருனே, அந்த சப்-இன்ஸ்பெக்டர் தங்கப்பாண்டியனை எவன் கொன்று வருகிருனே அவனுக்குத்தான் என் மகளை நான் மனப்பூர்வமாகத் தானம் செய்யப்போகிறேன். என் மகளுக்குச் சுயம்வரம் இனிமேல் தங்கப்பாண்டியனின் பலிபீடத்தில் தான். தம்பி! இது என் சபதம்!இதில் மாற்றம் இல்லை. மகளே செவந்திமாலை! உன் அண்ணனுக்காக உன் வாழ்க்கையை நீ தியாகம் செய்துதான் தீரவேண்டும்! உனது எதிர்காலத்தைப்பற்றி நீ கனவு காணுதே! நீ யாரையும் காதலிக்காதே! உனக்கு இனி காதல் இல்லை. சுகம் இல்லை. வாலிபத்தின் எண்ணங்களை உன் இதயத்திலிருந்து எடுத்து விடு! என் சபதத்தை நிறைவேற்று செவந்திமாலை! செவந்திமாலை!

''அம்மா! அம்மா!!— சிலம்பாயி கதறி ஓய்வதற்கும், செவிந்திமாலை மயங்கி அவள் மேலே விழுவதற்கும் சரியாக இருந்தது.

சிங்கராயனும் பஞ்சுப்புலியும் அப்படியே சிலையாகிப் போனுர்கள். கூட்டத்தில் பேச்சு இல்லை.

சிங்கராயன் மட்டும் தனக்குள்ளேயே பேசிக்கொண்டான். பஞ்சுப்புலியைச் சுட்ட பெயர் தங்கப்பாண்டியனுக்குச் சேராவிட்டால் தனக்கு இன்னெரு ஆபத்து சிலம்பாயி உருவில் வந்திருக்கக்கூடும் என்று சிங்கராயன் மனச்சாந்தி பெற்றுக்கொண்டான்.




(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்நியன் ஒருவன் நமது நிலத்தின் எல்லையில் கால் வைப்பதும், நம்மைப் பெற்ற தாயின் இதயத்தில் கால்வைப்பதும் ஒன்றுதான். சில ஆயிரம் அடி எல்லை நிலங்களுக்காக மட்டும் இன்று நாம் கம்யூனிஸ்ட் சீனுவிடம் போராடிக் கொண்டிருக்கவில்லை. நாட்டின் கௌரவத்தைக் காக்க தன்மானம் தலை குனியாமலிருக்க இராணுவ பலம் வாய்ந்த அவனுடன் நாம் மனேபலத்துடன் போராடிக் கொண்டிருக்கிருேம். இதில் நாம் பின் வாங்கினுல் புனிதமான தத்துவத்தின் அடிப்படையில் எழுந்த கொள்கையைக் காப்பாற்றச் சக்தியற்றவர்களாவோம். அதனுல்தான் எல்லையை மட்டுமல்ல, கௌரவத்தையும் கொள்கையையும் காப்பாற்ற, நடுநிலைமைக்கு ஊனம் ஏற்படா வண்ணம் தர்மத்தின் அடிப்படையில் தத்துவப் போர் புரிந்து கொண்டிருக்கிருேம்.

அல்ல! இது தத்துவப் போர் அல்ல என்ருல் நீங்கள் ''தத்துவம்'' என்பதற்கு என்னதான் பொருள் வைத்திருக்கிறீர்கள் என்பதை புரியும்படி சொல்லுங்கள்.

இது தத்துவப் போர் அல்ல எல்லைப்போர் மட்டும் தான் என்ருல் நாட்டில் இத்தனை அமர்க்களம் ஏன்? மக்மகான் எல்லைக்கோட்டிற்கு மட்டும் தானே ஆபத்து.வெறும்எல்லையை மட்டும் காப்பதற்காகவா இத்துனை ஆர்ப்பாட்டம், அவசரச் சட்டம், கோடிக்கணக்கில் நிதி, அறுபத்தைந்து நாடுகளுக்கு மேற்பட்ட ஆதரவு, வெளிநாட்டில் நிலைமையை விளக்கிப் பிரச்சாரம் இத்துனையும் எல்லைக்காக மட்டுமல்ல!

நாட்டிற்கு ஆபத்து, கொள்கைக்கு ஆபத்து,''கம்யூனிஸ்ட் சீனப்படையெடுப்பு, இந்தியத் துணைக்கண்டத்தின் ஜனநாயக அமைப்புக்கு விடப்பட்டிருக்கும் ஓர் அறைகூவலாகும்''—இப்படியெல்லாம் உணர்ச்சித் ததும்ப பேசப்படுகிறதே இது எல்லையைக் காக்க மட்டுமல்ல!

''தங்கத்தைத் தாருங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள், தேவையைக் குறைத்துக் கொள்ளுங்கள், கட்சி பேதங்களை மறந்து நாட்டைக் காப்பாற்ற ஒற்றுமை உணர்வுடன் பாடுபடுங்கள் என்று பிரச்சாரம் செய்யப்படுகிறதே இது எல்லையைக் காக்க மட்டுமல்ல! நமக்குச் சொந்தமான எல்லையைத் தவிர வேறு நாட்டின் பூமிக்கு நாம் சொந்தம் கொண்டாட மாட்டோம். அதைப் போலவே நமது பூமியில் ஒரு அங்குலத்தைதக்கூட அந்நியனுக்கு விட்டுக்கொடுக்கவும் மாட்டோம். இது நமது கொள்கை. இந்தக் கொள்கைக்கு விரோதமாகத்தான் கம்யூனிஸ்ட் சீனு படையெடுத்திருக்கிறது. அது குறிப்பிட்ட எல்லையையும் தாண்டி அஸ்ஸாம் விளிம்புக்கு வந்து எண்ணைக் கிணறுகளின் மீது கண்ணை வைத்துவிட்டு திரும்பியிருக்கிறது. எல்லையை மட்டுமல்ல; முடிந்தால் நாட்டையே கபளீகரம் செய்ய அதற்கு ஆசை. ஆகையால் இது எல்லைப் போரல்ல! கொள்கைப் போர்! கொள்கைக்கு அடிப்படை தத்துவம்! ஆகவே இது தத்துவப்போர்.

''சிலர் யுத்தத்தைச் சாக்கிட்டு கம்யூனிஸ்டுகளைப் பிடித்து உள்ளே போடு என்கிருர்கள்'' இதுவும் செல்லப்பாண்டியரின் திருவாய் மொழிதான்.

நேருவைத் தலைமை அமைச்சராகக் கொண்ட மத்திய அரசு ஒற்றர்கள் மூலம் அறிந்து, துரோகிகள் யாரெனத் தெரிந்து பாதுகாப்புக்கு விபத்து ஏற்படாத வகையில் சந்தேகத்திற்குரிய கம்யூனிஸ்டுகளை மட்டும் கைது செய்திருக்கிறது. செல்லப்பாண்டியர் பேசியிருக்கிருர் கம்யூனிஸ்டுகளுக்கு வக்காலத்து வாங்கும் பாணியில். அவர் அப்படிப் பேசினுரா? இல்லை 'ஜனசக்தி' தனக்குச் சாதகமாக அவர் பேச்சைத் திரித்து வெளியிட்டிருக்கிறதா? செல்லப்பாண்டியருக்கே வெளிச்சம்!

பொறுப்பிலுள்ளவர்கள் அவ்வப்போது,கூட இருப்பவர்களைத் திருப்தி படுத்துவதற்காக, குழந்தைத்தனமாகப் பேசுவதைக் கைவிட்டு பொறுப்புக்கு மதிப்புத் தருவார்கள் என எதிர்பார்க்கிருேம்.

—தினகரன்

உணவும் நமக்குப் போர்ப்பலம்
ஓரளவும் அதைவீணுக்காதீர்
எல்லையைக் காத்திட
எல்லையின்றி வழங்குவீர்
டிபென்ஸ் டெபாசிட் சர்டிபிகேட்டு
பெருமளவில் வாங்குவீர் [கள

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லையைத் தாண்டாதீர்கள் என்று சொல்லவில்லை. மீரட்டிலே கண்டித்ததாகத்தான் கிலோ மீட்டர் வேகத்திலே எழுதுகிறார்கள். ஆனால் பீகிங் சென்ற தங்கமணியாவது தட்டிக் கேட்டதுண்டா?

இந்திய சீன நட்புறவைக் கெடுக்க பிற்போக்காளர் சதியென்று அன்றும்—இன்றும் கூச்சல் போடுகிறார்களே தவிர உண்மையாகவே இந்தியாவை காக்க நினைக்கவில்லை. அன்று கேரளத் தலைவர் ஏ. கே. கோபாலன் சீன இந்திய மனக்கசப்பிற்கு தலாய்லாமாதான் காரணம் என்றார். சீனக் குடியரசின் விழாவை சென்னையிலே கொண்டாடிய தத்துப்பிள்ளைக் கம்யூனிஸ்டுகள் இன்றைக்கும் உயிரோடுதான் உலவுகிறார்கள்.

சென்னை வ. உ. சி. நகர் ஏரியாக் கமிட்டி பொதுக் கூட்டத்தில் பேசியபோது சீவானந்தம், தீய சக்திகள்தான் சீனாவைக் கண்டிக்கின்றன என்றும் ஏகாதிபத்திய நாடுகளின் வலையில் வீழ்ந்துவிடாமல் சீனாவிடமிருந்து சிறந்த பாடங்களைப் பெறவேண்டுமென்றும் இந்தியாவுக்குப் போதனைகள் செய்தார். சீனத் துருப்புகளை எதிர்த்து விரட்டவேண்டாம் என்றுதான் அன்றைக்கு மறைமுகமாகப் புலம்பினார்கள். அதே நாக்குகள்தான் கூச்சநாச்சமில்லாமல் நச்சுப் பேச்சுக்களை சகதிப் பத்திரிகையிலே சாக்கடைத் தண்ணீரைஊற்றி எழுதித் தள்ளுகிறார்கள்.

இந்தியப் படை வீரர்களை சீனத்தவர் கொன்ற பிறகும் கூட ஜீவானந்தம் என்ற ஜண்டாத் தோழர் இந்தியரும் சீனரும் சகோதரர்களாக இருக்கவேண்டும் என்றார். அந்த நாளில் குற்றாலத்தில் கூடிய தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் குருசேவின் அமெரிக்க சுற்றுப்பயணத்தை மகிழ்ச்சியுடன் பாராட்டினார்கள். கொலைகார கைதிகளை விடுதலை செய்யும்படிக் கேட்டார்கள். ஆனால் சௌ என்லாயைக் கண்டித்துப் பேசவில்லை — ஒரு வார்த்தையும் எழுதவில்லை! ஏன்? இன்றைக்கு உடலை ஆட்டி வாலை நீட்டி உட்கார்ந்து எழுந்து உறுமுவது ஏன்? கம்யூனிஸ்டுகளின் கள்ளத்தன்மையுள்ள நடவடிக்கைகள்தான் காரணம்! இவைகளையெல்லாம் அலிகாந்தன்கள் அறியவில்லை; அதனால் குலைக்கிறார்கள்.

கழகத்தவரைத் தூற்றும் கம்யூனிஸ்டுகள் தங்கள் கட்சியின் கல்கத்தா கூட்டத்து முடிவுகளை வெளியிலே சொல்ல வெட்கப்படுகிறார்கள். சென்னை—ஆம்பூர் — கரூர் — மதுரை — திருப்பூர் — புதுக்கோட்டை, இப்படிப் பல ஊர்களைச் சேர்ந்த காம்ரேடுகள் கல்கத்தா ரகசியங்களைக் கேட்டபோது கலங்கினார்கள்—கண்ணீர் வடித்தார்கள்! மீரட்டுக்கு முன்னாலே சென்னைக்கு, அதற்கு முன்னாலே அமிர்தசரஸ், 56ல் மலக்காடு, 53ல் மதுரை இப்படிப் பல தேசிய கௌன்சில் கூட்டங்களை— அதன் நிகழ்ச்சிகளைப் படித்துப் பார்த்தால் பரிதாபத்துக்குரிய செந்தொண்டர்கள் ஆளுக்கொரு முழக் கயிற்றிலேதான் தொங்கிக்கொள்ள வேண்டும்.

கல்கத்தா தீர்மானம் சீனாவை ஆதரித்து இந்தியாவைக் கண்டிப்பதாகும். கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு உட்கட்சி விவகாரங்களைத் தெருவுக்குக் கொணர்ந்தார்கள். கல்கத்தா முடிவுகளைச் சரியென்று வரவேற்றுவிட்ட செம்பிடாரித் தோழர்கள் பல காரணங்களைச் சொல்லித் தங்கள் தலைவர்களுக்குள்ளே தகராறுகள் பிளவுகள் கருத்து வேற்றுமைகள் இல்லையென்று பேசினார்கள். ஆனால் பீகிங் எஜமானர்களிடத்தில் பாடங்களை கேட்டு, மாஸ்கோ தெய்வங்களிடம் புதிய வரங்களைப் பெற்றுக் கொண்டு, திரும்பிய அஜய்கோஷ் என்ற அதிசய மனிதன் கட்சியில் கருத்து வேற்றுமையில் இருப்பதாக ஒப்புக் கொண்டார். விரைவிலேயே அவற்றை நீக்கிக்கொள்ளப் போவதாகவும் அறிக்கையினை வெளியிட்டார். பீகிங் போகத் தகுதிபெற்று மாஸ்கோப் போகாமல் திரும்பி பூபேஸ்குப்தா என்ற முந்திரிக்கொட்டைப்பேச்சாளர், கட்சியில் கருத்து வேறுபாடு என்பது ஏகாதிபத்தியங்களின் சதியென்று சாதித்தார். சங்கரன் நம்பூதிரியென்று அழைக்கப்படும் ஒருவர் 'பிளவு உண்டென்பதற்கு ஆதாரமில்லை' என்றார். டாங்கேயும் ஏ. கே. கோபாலனும் கமிட்டிக் கூட்டத்திற்குக் கலந்து கொள்ளாத காரணம் இருபத்தெட்டு மாத முதன் மந்திரிக்கே தெரியவில்லை.

பஞ்சசீலக் கொள்கைகளின்படி இந்திய—சீன தகராறுகளைப் பேசித் தீர்க்கவேண்டுமென்றாரே தவிர இப்போது சொல்லுவதுபோல ஒரு வார்த்தையில் கண்டிக்கவில்லை. கல்கத்தா முடிவுகளை மறுக்கும் டாங்கேயைப் பற்றிக் கேட்டபோது, அவரது சொந்தக் கருத்துகள் என்றும், தான் கருத்துத் தெரிவிக்கவில்லையென்றும் நிருபர்களிடத்திலே மறுத்துவிட்டார்.

இந்தக் கட்சி விஷயங்கள் எல்லாம் கலைமன்றத்துச் சீடர்களுக்கும் அலிகளை விரட்டிய அழுகல் கதையளப்புகளுக்கும் தெரியாது. கட்சியின் செயலாளர் எனப்படும் கந்தசாமிகளுக்கும் புரியாது. காதுவலித் தலைவர்களுக்கு இவையெல்லாம் மறந்துவிட்டது. கல்யாண முதலியார்கள் கம்பிகளுக்கு எண்ணை தடவிக் கொண்டிருப்பதால் வெளியே வந்து 'இல்லையென்று' புளுக முடியாது. சிவகாமசுந்தரிகளின் சிந்தனையில் இவை நுழையாது!

(8-ம் பக்கம் பார்க்க)



## ஜனவரி - 6

### நினைவிருக்கட்டும்

தேசியப் பாதுகாப்பிற்கு நிதி வழங்க மதுரை தமுக்கம் மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம்.

**மதுரை முத்து**

சுறுசுறுப்பாக ஏற்பாடு செய்து வருகிறார்.

## அறிஞர் அண்ணா

மற்றும் கழக முன்னேடிகள் கலந்து கொள்ள இருக்கின்றார்கள்.

அன்று—வைகை பெருக்கெடுத்துக் கொண்டபோது மக்களுக்கு அழைப்பு விடுத்தான் மதுரை மன்னன்.

கூடை மண் சுமந்து கொட்டிக் கூடல் நகர் காத்தார் பாண்டித் திருநாட்டுப் பெருமாந்தர்.

இன்று—இந்தியத் துணைக் கண்டத்திற்கு வந்திருக்கும் துயர் துடைக்க, நிதி கொடுக்க அழைப்பு விடுக்கிறார் நமது அண்ணன்.

மண் சுமந்துகொட்டி மதுரைத் திருநகர் காத்த மாவீரர் வழி வழியே! நாட்டின் பாதுகாப்பிற்கு அறிஞர் அண்ணா அவர்களிடம் நிதி வழங்க ஜனவரி-6ல் தமுக்கம் மைதானத்திற்குத் தவறாது அணி திரண்டு வருக!

சங்கத் தமிழ் வளர்த்த பெருமை மதுரையம்பதிக்கு என்றென்றும் உண்டு.

தங்கத் திருநாட்டைக் காக்கத் தந்திட்டார் பெருநிதி என்ற பெருமையும் கொடிகட்டிப் பறக்கக் கூடல் நகரத்துப் பெருமக்களே கூடுவீர் தமுக்கத்தில்!

**மா மதுரைப் பெருமக்காள்!**
**மாண்புமிகு கழகத் தோழர்காள்!**
**குடும்பத்தோடு வாருங்கள்!**

—முடிந்தால்தான் என்பது அல்ல! அவசியம் தரவேண்டும்! எந்தச் செலவையாவது குறைத்துக் கொள்ளுங்கள்! இதற்கு மனமுவந்து தாருங்கள்!

**நாடு காக்கும் தூய பணிக்கு**
**நாம் கொடுக்கும் காணிக்கை**
**எது வேண்டுமானாலும் தரலாம்;**

காதிலே கிடக்கும் நகை தரலாம், கையிலே ஒலிக்கும் தங்க வளை தரலாம், தலையில் மணத்துக் கிடக்கும் மலர் தவிர, உடலில் கனத்துக் கிடக்கும் தங்க அணியெல்லாம் தரலாம்!

சென்னை நகரத்தை மிஞ்சிவிட்டார்கள் மதுரை நகரத்துப் பெருமக்கள் என்று அறிஞர் அண்ணா பெருமைப்பட வேண்டும்!

**மறவாதீர்கள் ஜனவரி-6**

**ஜன சமுத்திரம் எனக் கூறு**
**இதுபோல் கண்டதில்லை மதுரை**
**வரலாறு எனக் கூடுவீர்!**
**காணிக்கை குவிப்பீர்**
**கடமையைச் செய்வீர்!**

# கேள்வி பதில்

கே: தமிழகத்தில் எடுக்கப்பட்ட தமிழ் யுத்தப் பிரசாரப் படம் வடநாட்டில் காட்டப்படுகிறதா?

வி. எம். மாறன்
சென்னை-24

ப: இல்லை!

கே: எம். ஜி. ஆர். தனது தாய்நாட்டைவிட தமிழ்நாட்டிற்கு ஏன் அதிகம் உழைத்து வருகிறார்?

ஏ. எல். சொக்கலிங்கம்
சென்னை-19

ப: மாநிலப் பற்றைவிட அவருக்கு நாட்டுப் பற்று அதிகம். திராவிட நாட்டில் ஓர் அங்கம்தானே அவரது தாய்நாடு! அதுபோக எங்கு ஏழ்மை, வறுமை, இன்னல்கூத்தாடுகிறதோ அங்கெல்லாம் அவர் உதவி குறையின்றிக் கிடைக்கும். இதில் மாநில வித்தியாசம் அவர் பார்ப்பதே இல்லை.

கே: பாதுகாப்பு நிதிக்கு எம். ஜி. ஆர். தங்கவாள் கொடுத்தாரே அதைப்பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

எம். ஆறுமுகம்
தத்தநேரி

ப: தங்கத்தைவிட உயர்ந்த குணம், பரந்த எண்ணம், சிறந்த உள்ளம் அவரிடம் குடிகொண்டிருப்பதாகக் கருதுகிறேன்.

கே: நான் அண்ணாவும், எம். ஜி. ஆரும கோட்டும் சூட்டும் அணிந்து சேர்ந்து நிற்கும் படம் ஒன்று வாங்கினேன். அதைக் காங்கிரஸ் நண்பர் ஒருவர் பார்த்துவிட்டு இவர்தான் தென்னாட்டுக் காந்தியா? காந்தியென்றால் கதர்ச் சட்டையில்லையே? சூட்டும் கோட்டும் அணிபவர்தான் காந்தியா என்கிறார்; இதற்கு தங்கள் பதில் என்ன?

—குப்பம், கண்டிகை

ப: உடையில் அல்ல நாம் சொல்லும் ஒற்றுமை. குணத்தில், செயலில், அரசியலில். ஒழுக்கத்தில் அண்ணா-காந்திக்கு ஈடானவர். காந்தி எந்தக் காரியத்தையும் அவசரப்பட்டு நிதானமிழந்து செய்ததில்லை. கொண்ட கொள்கையை எவருக்காகவும் அவர் விட்டுக் கொடுத்ததில்லை. அவர் தலைமையைக் குறைகூறி பலர் கோஷ்டி சேர்த்துக் கொண்டு குழப்பம் செய்தபோதும் அவர்களை அன்புடன் நேசித்தார் காந்தி.

## வணங்காமுடி பதில் தருகிறார்

இந்தக் கொள்கைகளில் எதில் குறைந்து காணப்படுகிறார் நமது தென்னாட்டுக் காந்தி அறிஞர் அண்ணா. இந்தியத் துணைகண்ட விடுதலைக்கு காந்தியார் அரும்பாடுபட்டார். மக்களுக்கு உணர்ச்சி ஊட்டினார். எழுச்சி காட்டினார்.

இன்று அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாட்டின் விடுதலைக்கு ஜனநாயக வழியில் போராடி வருகிறார். ஆற்றல் மிக்க அணிவகுப்பை உருவாக்கியிருக்கிறார். விடுதலையின் அவசியத்தை மக்களுக்கு தெளிவாக உணர்த்திவருகிறார் தென்னாட்டுக் காந்தி அறிஞர் அண்ணா.

இந்த அளவில்தான் காந்தியாரின் உருவை நாம் அண்ணாவிடம் காண்கிறோமே தவிர, கோட்டிலும், சூட்டிலும், கதர்ச் சட்டையிலும் அல்ல. கதர் கட்டியிருந்தால் மட்டும் காந்தியாராகிவிட முடியுமா?

காந்தியாரின் சாம்பலைக் கங்கையில் கரைத்துவிட்டோம் என்ற நம்பிகையால்தான கதர்ச் சட்டைமாட்டிக்கொண்டு இன்று பலர் காந்தீயக் கொள்கையை குழி தோண்டிப் புதைத்து வருகிறார்கள்.

கதர்ச் சட்டையில் காந்தீயம் இல்லை என்பதை அந்தக் காங்கிரஸ் நண்பரிடம் சொல்லுங்கள்.

கே: பெரியாருக்குப் பின் அவர் வாரிசாக யார் வரக் கூடும்?

எல். சுந்தரம்
சென்னை-2

ப: பலர் போட்டி போட்டுக் கொண்டு சேவகம் செய்து வருகிறார்கள். இதில் உண்ணாவிரதக் கதாநாயகனுக்கே வாய்ப்பு இருப்பதாகப் பலர் சொல்லுகிறார்கள். ஆனால், தன் காலத்திலேயே கட்சியை அழித்து விடுவதென்று பெரியார் முடிவு கட்டியிருக்கிறாராம். வாரிசும் வேண்டாம் வெங்காயமும் வேண்டாம் என்பது ஐயாவின் உயர்ந்த எண்ணம் போலும்.

கே: சீனப்போர் முடிந்து விட்டதா இல்லையா?

என். எஸ். மணி
ஆற்காடு

ப: இரத்தப் பசி கொண்ட புலி ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது. சமயம் பார்த்துப் பாய்ந்தாலும் பாயும்! அந்தப் பசி தீர்ந்து ஓய்ந்தாலும் ஓயும். எதற்கும் நாம் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது "சீனா இந்தியாவைக் கவர முனைந்தது சரியே! ஆனால், தக்க காலத்தைக் கணித்துக்கொள்ளத் தவறிவிட்டதே" என்றோ, "ஆசியாவில் பொதுவுடைமை இயக்கத்தைப் பரப்பச் சீனா எடுத்துக்கொண்ட முயற்சி சரியே. ஆனால், இன்றையக் குறியாக இந்தியா எடுத்துக் கொண்டதுதான் தவறு" என்றோ கருதி நடு நிலைமை வேடம் தரித்திருக்கலாம்.

அல்லது "சீனா இப்போதே பொதுவுடைமை அகிலத்திற்குத் தலைமை வகிக்கத் துடிதுடிக்கிறது. ஆசியத் தலைமையை அது கைப்பற்றிவிட்டால் பின் அதுவே உலகத் தலைமையையும் கைப்பற்றி விடுவது கடினமாகாது? நெடும் பல நாளாய் நமக்கிருக்கும் பெருமையை அது கொள்வதோ? கூடாது! கூடாது! அது நடந்து விட்டால் நம் மிரட்டல் பருப்பு வேகாது! என்ற அழுக்காறுலும் மருட்சியாலும் நீட்டிய நேசக் கரத்தைத் திரும்ப இழுத்துக் கொண்டிருக்கலாம்.

இவற்றை ஊகித்துணரவும் திறனில்லாப் பிறவிகள், மனித உருவம் கிடைத்து விட்டதாலேயே தமக்குக் கூர்ந்த மதி மூளை இருப்பதாக எண்ணிக் கொள்கின்றன.

கழகத்தைவிட்டு வெளியேறியதால் உள்ள செல்வாக்கையும் இழந்து திண்டாடும் பிறவிகள் தாம், சீன வெறியருக்கு வால் பிடிக்கும் முறையில் இந்தியப் பொதுவுடைமையரோடு சேர்ந்துகொண்டு 'இது தத்துவப் போர் இல்லை!' என்று சொல்லியிருக்கின்றன! ஏதோ ஒரு சம்பத்தை எதிர்பார்த்துச் சென்று எதிர்பார்த்துச் சென்று ஏமாந்தவர்கள் அவர்கள்.

வட்டாட அரங்கு கிடைக்காததால், கொண்டாட மக்கள் வராததால், அவை வயிறெரிந்து—மதி குலைந்து திட்டுகின்றன; நம்மையும் நாட்டையும் காக்கும் அண்ணாவைப் பழிக்கின்றன; பொய்யையும் புளுகையும் வாரி இறைக்கின்றன; "போரில்லை; இது தத்துவப் போரில்லை!" என்று கூச்சல் போடுகின்றன! அவை இடம் போனாலும் சரி; வலம் போனாலும் சரி; நம்மீது விழுந்து கடிக்காவிடின் நாம் பேசாமலே இருப்போம்!

பிப்ரவரி 1 வெளி வருகிறது!
அண்ணாவின் அணிவகுப்பில் ஆற்றல் மிகுந்த படைக்கலன்!
தென்னகம்
ரு இதழ்
ஆசிரியர்: K. A. மதியழகன். M.L.A.
தனி இதழ் 16 காசு.
ஆண்டு சந்தா 8 ரூ.
✻ எல்லா இடங்களுக்கும் முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.
'தென்னகம்' 126. மவுண்ட் ரோடு, சென்னை-6.

ஆசிரியர், வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை—6.
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை—17.